விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*




பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 23 வெள்ளிக்கிழமை (06.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 138

பொதுக் கட்டமைப்புப் பற்றி ஆராய

# ஜனாதிபதி - ஜே.வி.பி. இன்று முக்கிய சந்திப்பு

## பரபரப்புச் சூழலில் அரசின் முடிபு நாளை வெளியாகும்!

(கொழும்பு)

**பொதுக் கட்டமைப்பு விடயம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், ஜே.வி.பி. முக்கியஸ்தர்களுக்கும் இடையே இன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற வுள்ளது. பொதுக்கட்டமைப்பை உருவாக்க ஜே.வி.பியின் முழுமையான ஆதரவைப் பெற்றுக்கொள்வதே இச்சந்திப்பின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.**

பொதுக்கட்டமைப்பு ஏற்படு வதை ஜே.வி.பி அடியோடு நிராக ரித்துவருகிறது. மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை உருவாக்க ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க முயற் சித்தால் ஆட்சிக்கான ஆதரவை விலக்குவோம் என்று ஜே.வி.பி கங் கணம்கட்டி நிற்கிறது.

இத்தகைய முரண்பாடான நிலையினாலேயே ஜனாதிபதி ஜே. வி.பி. (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதரகம் வீரவன்சவுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவை தூதுவராலயத்திற்கு வருமாறு கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விமல் வீரவன்ச நோர்வே அரசை கடுமையாகச்சாடி உரைநிகழ்த்தினார். மேலும் நோர்வேயின் செயற்பாடு இலங்கையில் கட்டுமீறிவிட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)


# தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு வயது முப்பது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று 30 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்தது. 1970 ஆம் ஆண்டளவில் சிங் கள பேரினவாத அரசுகள் தமிழ்மக்களுக்கு இழைத்த அநீதிகளைக் கண்டு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற் காக விடுதலைப் போராட்டத்தில் களமிறங் கினார்.

அவரால் தமிழ்மக்களுக்கான ஆயுதப் போராட்டத்தை தொடங்கிய ஆரம்பகால கட்டத்தில் தமிழ்மக்கள் பேரினவாதத்திற்கு எதிராக நடாத்திய அகிம்சைவழியிலான போராட்டங்கள் தோல்வியில் முடிந்தன.

இந்நிலையில் தமிழ் இளைஞர்கள் எழுச் சிப் போராட்டத்தில் குதித்த காலம் தமிழீழ தேசியத் தலைவர் தமிழ மாணவர் பேரவை யில் இணைந்து பல எதிர்ப்புப் போராட்டங் களில் கலந்துகொண்டார்.

தமிழ்மாணவர் பேரவை ஒழுங்கான கட் டுப்பாடுகள் இல்லாததன் காரணமாக தலை வர் பிரபாகரன் தமிழ் மாணவர் பேரவைவ்யி லிருந்து வெளியேறி கொள்கையில் தெளி வும், தளராத இலட்சிய உறுதியும் கொண்டு தீர்க்கதரிசன நோக்கோடு தமிழீழ விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)



## ஜே.வி.பியின் உயர்மட்டக்குழு கூடி ஆராய்வு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு விடயம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இன்று பேசவுள்ள விடயங்கள் குறித்து ஜே.வி.பியின் உயர்மட்டக் குழுவினர் நேற் றிரவு கூடி ஆராய்ந்தனர்.

நேற்று நள்ளிரவு வரை நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவு கள் குறித்து எதுவும் வெளியிடப்படவில்லை. இரகசியமான முறையிலேயே நேற்றைய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரி விக்கப்படுகின்றது. (ச)

## ஆளுநரின் வருகையை எதிர்த்து பொதுநூலகம் முன் நேற்று மறியல்

## மட்டக்களப்பு சிறைக் கூரைமேல் ஏறி புலி உறுப்பினர்கள் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

நேரில்வந்து சந்திக்கவேண்டுமென்ற கோரிக்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவின் வருகையை எதிர்த்து நேற்று யாழ். பொது நூலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆளுநரின் வருகையை எதிர்த்து மக்கள் யாழ். பிரதான நூலகத்தின் முன்பாக கறுப்புக் கொடிகளைக் காட்டியவாறு எதிர்ப்புப் பதாகைகளை தாங்கியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஆளுநர் பொது நூலகத்தின் பின்வாயிலால் உள்ளே சென்றார்.

இதையறிந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதான வாசலில் முன்பாக நின்று ஆளுநரை வெளியே வருமாறு உரத்த குரலில் கத்தினார்கள். இறுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் ஆளுநரின் வருகையை எதிர்த்து நூலகத்தைச் சுற்றி பேரணி ஒன்றையும் நடத்தினார்கள்.

ஆளுநருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (ச-19,43)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் நான்குபேர் உட்பட ஐந்துபேர் நேற்று மட்டக்களப்புச் சிறைச்சாலையின் கூரைமேல் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை நேரில்வந்து சந்திக்கவேண்டுமென்ற கோரிக்கையினை முன்வைத்தே அவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தடைசெய்யப்பட்ட பொருட்களுடன் நடமாடினார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கடந்த வருடம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் தொடர்ந்தும் விளக்கமறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# பிரதமர் - ஜனாதிபதி சந்தித்து முக்கிய பேச்சு

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவது தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு பொதுக் கட்டமைப்பின் அவசியம் குறித்து ஜனாதிபதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கி உள்ளார்.

இதேவேளை நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது குறிதது்ம் ஜனாதிபதியும் பிரதமரும் விரிவாகக் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு தான் பூரண ஆதரவு வழங்குவதாகப் பிரதமர் இச்சந்திப்பின்போது உறுதியளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

# நாடுதழுவிய ரீதியில் பேரணி நடாத்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் முஸ்தீபு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பினை விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளக் கூடாதெனத் தெரிவித்து எதிர்வரும் 16 ஆம் திகதி நாடுதழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களையும், கண்டனக் கூட்டங்களையும் நடத்தப்போவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் பொதுக்கட்டமைப்பினை விடுதலைப் புலிகளிடம் வழங்கினால் முழு நன்மையும் அவர்களிடமே சென்றுவிடும். ஏனெனில் தனிநாட்டினை அடைய விடுதலைப் புலிகளுக்கு வேறுவழியில்லை. எனவே பொதுக் கட்டமைப்பின் ஊடாகவே விடுதலைப் புலிகள் தனிநாட்டினை அடைய முனைகிறார்கள். (12 ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கணித, விஞ்ஞான பாடங்களில் மாணவர் அதிக கவனம் செலுத்த வேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் கணித, விஞ்ஞான பாடங்களில் அதிக கவனம் செலுத்தி கற்று பரீட்சைகளில் சிறந்த பேறுபெறுகளை பெறவேண்டும் என்று கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற சுகாதாரக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மாவட்ட மாணவர்களிடையே பரீட்சை பேறுபெறுகளில் கணித,விஞ்ஞான பாடங்களில் வீழ்ச்சி காணப்படுகின்றது. இதன் காரணமாக வேலைகளைப் பெற்றுக்கொள்வதில் இடர்கள் உள்ளன.

க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணித விஞ்ஞான பாடங்களில் திறமைச்சித்திபெறாதவர்கள் தாதியர் உத்தியோகத்தினை பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாண[illegible] கணித விஞ்ஞான பாடங்களில் கூடுதல் [illegible] செலுத்தவேண்டும். எமது மாவட்டத்தில் [illegible]மனைகளுக்கு அருகிலுள்ள ஒருவர் கணித [illegible]ஞான பாடங்களில் திறமைச்சித்தி அடைந்து [illegible]ணப்படுவார் ஆனால் அம் மருத்துவமனையிலே தாதியர் உத்தியோகத்தராக பணி[illegible] வாய்ப்புக்கள் உள்ளன.

எமது சமூகத்திலே தாதிய தொழில் என்பதை குறைவாக கருதுகின்ற நிலைமை [illegible]ணப்படுகின்றது அந்நிலை மாறி சமூகப் பொறுப்[illegible]ளவர்களாக எல்லோரும் செயற்பட்டு எமது மாவட்டத்தில் மருத்துவத் துறையினை கட்டி வளர்க்க அனைவரும் முன்வர வேண்டும் என்றார். (ற)

## கட்டாக்காலி நாய்கள் [illegible]கரிப்பு

அராலி அரசினர் கிராமிய வைத்தியசாலைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலைப் பகுதியில் நாயக்குட்டிகளை கொண்டுவந்து விடுவதாலேயே இக்கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாய்களை நஞ்சூட்டி அழிப்பதில் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அசமந்தப்போக்கைக் [illegible]பிடித்துவருவதாகவும் பொதுமக்கள் தரப்பில் [illegible]ட்டப்படுகிறது. (ற-49)

# இராசி பலன்

06.05.2005
சித்திரை 23, வெள்ளிக்கிழமை
திரயோதசி பிற்பகல் 3.34 மணிவரை
ரேவதி முன்னிரவு 7 மணிவரை
சுபநேரம் 5.56 - 7.26 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை

- [illegible]: கடின வார்த்தை, [illegible]செலவு, காரிய தாமதம், உஷ்ணவியாதி.
- இடபம்: குடும்பமகிழ்ச்சி, தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை.
- மிதுனம்: அதிகாரம், செய்தொழில் நன்மை, போசன சுகம், தெய்வசிந்தை.
- கடகம்: கட்டுப்பாடு, அதிகபிரயாசை, பிரயாணம், பிதா சிந்தை.
- சிங்கம்: வீண்பகை, காரிய தடங்கல், பிரயாணக் கஷ்டம், போசனசுகம்.
- கன்னி: தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், கௌரவமான நிலை, அபூர்வசந்திப்பு.
- துலாம்: தேகநலன், செய்தொழில் விருத்தி, உற்சாகம், முயற்சி பலிதம்.
- விருச்சிகம்: மனஸ்தாபம், பெரியோர் ஆதரவு, தெய்வ சிந்தை, தொழில்விருத்தி.
- தனுசு: அமைதிக்குறைவு, தாய்வழி உறவு, முயற்சி தாமதம், பணவிரயம்.
- மகரம்: கூட்டுமுயற்சி, தெய்வ தரிசனம், போசன சுகம், சகோதரர் உதவி.
- கும்பம்: அதிகவார்த்தை, பிறர் ஒத்துழைப்பு, அமைதிக்குறைவு, தனவிரயம்.
- மீனம்: தெய்வசிந்தை, செல்வாக்கு, காரிய அனுகூலம், வாக்குமேன்மை.

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

—வளவன்

# யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே கிரிக்கெட்டை வளர்க்க நடவடிக்கை

## யாழ். வந்த ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று யாழ்ப்பாணம். வருகை தந்தார் யாழ்.வந்த அவர் காலை 10.30மணிக்கு யாழ்.பொதுநூலகத்தில் திணைக்கள அதிகாரிகள் சிலரை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். ஆளுநருடன் அவரது செயலாளர் அமிர்தலிங்கம், இலங்கை கிரிக்கெட் சபையை சேர்ந்த கிரிசாந்தடிசில்வா கப்டின் ஜெயசிங்க ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் ஆ. சிவசுவாமி யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் திணைக்கள அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

ஆளுநரது கலந்துரையாடலின் போது யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை வளர்த்தெடுப்பது தொடர்பாகவும் குறிப்பாக வடக்கு கிழக்கில் தோல்பந்து கிரிக்கெட்டை வளர்த்தெடுப்பதோடு வடக்கு கிழக்கில் இருந்து ஒரு கிரிக்கெட் வீரரை தெரிந்தெடுத்து இலங்கை கிரிக்கெட் அணியில் இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையே கிரிக்கெட்டை வளர்த்தெடுக்கஉள்ளதாகவும் இதற்கென முதற்கட்டமாக யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயம், ஸ்கந்தவரோதயா கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்தா பாடசாலை ஆகியன முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையை புனரமைப்பது தொடர்பாகவும் வேறுசில இடங்களில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளை அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 11.30மணிக்கு யாழ்.மாவட்ட மேல்நீதி மன்றத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, யாழ்.மாவட்ட அரசஅதிபர் கே.கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலை அடுத்து மாலை 2மணிக்கு நிக்கொட்நிறுவனத்தினால் அச்சுவேலி ஊரெழு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை வேலைத்திட்டங்களையும் அவர் பார்வையிட்டார். (ச.19)

# தேவாலயம் மீதான தாக்குதலுக்கு கிறிஸ்தவ அமைப்புகள் கண்டனம்

(கொழும்பு)

பலப்பிட்டியில் உள்ள ஸியோன் தேவாலயத்தின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கிறிஸ்தவ அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

பௌத்த பிக்கு ஒருவரும்,ஐ.தே.க. பிரதேசசபை தலைவர் ஒருவரும் சேர்ந்த குழுவொன்று இத்தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத்தாக்குதலின்போது ஆலயத்தின் போதகரின் மனைவி உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் கடல்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்தேவாலய போதகர் நிவாரண உதவிகளைச் செய்துவருகிறார்

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பலபிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசை வற்புறுத்துமாறு கிறிஸ்தவ அமைப்புக்கள் சர்வதேச சமூகத்திடமும் மனித உரிமைகள் அமைப்புகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளன. (ற)

## நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள்

# அனல் மின்நிலையங்களை நிர்மாணிக்காமையே மின்சார நெருக்கடிக்கான பிரதான காரணம்

(கொழும்பு)

நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் அனல் மின் நிலையங்களை நிர்மாணிக்காத காரணத்தாலேயே மின்சார நெருக்கடிகள் தோன்றியிருப்பதாக அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த தெரிவித்துள்ளார்.

சபை அமர்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதில் அளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் நாளாந்த மின்சார பாவனையில் அறுபது சத வீதமானவை அனல் மின்நிலையங்கள் ஊடாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

மின்சார சபையும் தனியார்துறையும் பெறும் நீர்மின் வலு மொத்தத் தேவையின் 35 சத வீதத்தை மாத்திரமே பூர்த்திசெய்கின்றது.

இத்தகைய பின்னணியில் ஒரு அலகு மின்சாரத்திற்கு ஒன்பது ரூபா தொண்ணூறு சதம் செலவாகின்றது.

ஆனால் ஏழு ரூபா எழுபது சதம் மாத்திரமே நுகர்வோரிடமிருந்து அறவிடப்படுகின்றது.

மின்சாரசபை 2000 ஆம் ஆண்டு தொடக்கம் நாளாந்தம் நான்குகோடி ரூபா நஷ்டத்தை எதிர்நோக்குகின்றது.

அவ்வாறே மின் விநியோகத்தில் இருபது சதவீத வலு விரயமாகின்றது.

இந்த விடயங்களைக் கவனத்தில்கொள்ளும்போது குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய மாற்றுவழிகள் அவசியப்படுகின்றன என்றும் சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்தார். (ற-5)

# அதிபர்கள் பணி நீக்கத்தை ஒருபோதும் ஏற்க முடியாது

## அரச சேவை ஆணைக்குழு

(கொழும்பு)

கொழும்பு ஆனந்தா கல்லூரி அதிபர் பீ.ஏ.அபேரத்ன மற்றும் கண்டி கிங்ஸ்வுட் கல்லூரி அதிபர் ரன்ஜித் சந்ரசேகர ஆகியோரைப் பதவிநீக்கம்செய்ய கல்வியமைச்சு எடுத்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளமுடியாதென அரச சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அவ்விருவரையும் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு ஆணைக்குழு கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

குறித்த இரு கல்லூரிகளின் அதிபர்களையும் பணி நீக்கம் செய்வதற்கு அனுமதிகேட்டு கல்வியமைச்சின் செயலாளர் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிய கடிததிற்கு பதிலளிக்கும் வகையிலேயே ஆணைக்குழுவினால் கல்வியமைச்சின் செயலாளருக்கு இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதிபர்கள் இருவருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் அரசசேவைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு அமைய கல்வியமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமையின் கீழ் ஒரு குழுவை நியமித்து அக்குழு விசாரணைகளை மேற்கொண்டு இருவார காலத்தில் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருக்கவேண்டும்.

ஜனாதிபதி விசாரணைப்பிரிவு இவ்விடயம் குறித்து விசாரணை செய்தமை தமக்கு எதுவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாத போதிலும், அதிபர்களைப் பதவி நீக்கம் செய்த நடவடிக்கையானது அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் சிக்கலை ஏற்படுத்தும் எனவும் அந்த ஆணைக்குழுவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ரஊப் ஹக்கீமுக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தனது கட்சி உறுப்புரிமையை ரத்துச்செய்வதற்கு கட்சி எடுத்த தீர்மானம் சட்டத்துக்குப் புறம்பானது எனக் குறிப்பிட்டு அமைச்சர் நஸீப் ஏ.மஜீத் உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில்,

கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி கட்சியின் தலைமைத்துவம் தன்னை கட்சியிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்தது.

விரிவான விசாரணைகளின்றித் தன்னை இக்கட்சியிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவதற்குக் கட்சி தீர்மானித்திருப்பதானது சட்டவிரோதமானது.

எனவே இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட நான்கு பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ற-8)

# திருத்தப்பட்ட குற்றத்தடுப்பு பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(கொழும்பு)

குற்றத்தடுப்புத் தொடர்பான சட்டமூலத்தினைத் திருத்தி அமைக்கும் வகையிலான பிரேரணை கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் விளக்கமளித்த நிதியமைச்சர் ஜோன் செனவிரத்தன,

குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவரை 24 மணித்தியாலங்கள்வரை தடுத்து வைக்கும் முறையை 48 மணித்தியாலங்களுக்கு மாற்றுவதற்கு இந்த சட்டமூலத்தில் இடம் தரப்பட்டுள்ளது.

அத்துடன், மேன்முறையீட்டுத் தலைவர் நியமனத்தில் பிரதம நீதியரசர் தலையிடலாம் என்று சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அது ஐக்கிய தேசியக் கட்சியின் வேண்டுகோளின் அடிப்படையில் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இந்தச் சட்ட மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவரைத் தடுத்து வைக்கும் காலத்தை 24 மணித்தியாலங்களிலிருந்து 48 மணித்தியாலங்களாக அதிகரிப்பதனால மாத்திரம் குற்றங்களைத தடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

எனினும் விவாதததுன் பின்னர் குறித்த பிரேரணை வாக்கெடுப்புக்கு விடாமல் நிறைவேற்றப்பட்டது.(ற-4)

## சுனாமி சேத நட்டஈடுகோரி
# மட்டு.அமிர்தகழி மக்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த வீடுகளுக்குரிய நட்டஈட்டுக் கொடுப்பனவை முழுமையாக் வழங்கக்கோரி மட்டக்களப்பு அமிர்தகழி கிராம மக்கள் நேற்று முன்தினம் பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர் இதன் காரணமாக பிற்பகல்வரை செயலகம் இயங்கவில்லை.

200 மிற்றருக்கு அப்பால் சேதமடைந்த தமது வீடுகள் தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட சேத மதிப்பீடுகள் திருப்திகரமானதாக இல்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தங்களுக்கு நட்டஈடு முழுமையாக வழங்கப்படவேண்டும். புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டு நட்டஈடு மதிப்பீடு மீண்டும் மேற்கொள்ளப்பப்படவேண்டும் போன்ற கோரிக்கைகள் அவர்களினால் முன்வைக்கப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் வேல்முருகு சண்முகத்திற்கும் குறிப்பிட்ட கிராம பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் நட்டஈட்டுக் கொடுப்பனவு மீளாய்வு செய்யப்படும். மீண்டும் இழப்பீடுகள் மதிப்பீடு செய்யப்படும் என மாவட்ட செயலாளர் அளித்த உறுதிமொழியையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ச)

# நாட்டுப் பற்றாளர் குலசேகரத்தின் புகழுடல் தீயுடன் சங்கமமானது

(யாழ்ப்பாணம்)

நாட்டுப்பற்றாளர் கந்தையா குலசேகரம் கடந்த 3ஆம் திகதி சாவடைந்துள்ளார்.

இவரது வீரவணக்க நிகழ்வு நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு உரும்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் ஓய்வுபெற்ற அதிபர் பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஈகச்சுடரினை, அவரது மனைவி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி, மற்றும் மாவீரர் அர்ச்சுனாவின் தந்தை ஆகியோர் ஏற்றினார்.

மலர் மாலையினை யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத் துறை விரிவுரையாளர் இளம்பிறை அணிவித்தார். தொடர்ந்து வீரவணக்க உரைகள் இடம்பெற்றது.

பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் அவரது புகளுடல் எடுத்துச் செல்லப்பட்டு, உரும்பிராய ஒஸ்கா வீதியிலுள்ள இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமானது

(ச)

## வட-கிழக்கு மாகாணத்திலுள்ள
# மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கிடையில் விளையாட்டுப்போட்டிகள் நடாத்துபபடவுள்ளன.

கடந்த வாரம் திருகோணமலையில் இடம்பெற்ற சகல மாவடட விளையாட்டு அதிகாிகளுகது மிடையிலான சந்திப்பின்போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேசைப்பந்தாட்டப்போட்டி ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி மன்னாரிலும், மருதன் ஓட்டப்போட்டி மே மாதம் 14,15ஆம் திகதிகளில் திருகோணமலையிலும், கூடைப் பந்தாட்டப்போட்டி மே மாதம் 28, 29ஆம் திகதிகளில திருகோணமலையிலும், கரப்பந்தாட்டப் போட்டி ஜூன் மாதம் 4, 5ஆம் திகதிகளில யாழ்ப்பாணத்திலும், கொக்கி ஆண்களுக்கான போட்டி ஜூன் மாதம் 6ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், எல்லே ஆண்களுக்கான போட்டி ஜூன் 11,12ஆம் திகதிகளில் அம்பாறையிலும் நடத்தப்படவுள்ளன.

அத்துடன், வலைப்பந்தாட்டப் போட்டி ஜூன் மாதம் 18, 19ஆம் திகதிகளில் கிளிநொச்சியிலும், கபடி ஆண் பெண்களுக்கானது ஜூன் மாதம் 25,26 ஆம் திகதிகளில் வவுனியாவிலும், உதைபந்தாட்டம் ஆண்களுக்கான போட்டி ஜூலை 2, 3, 4ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும்,

எல்லே பெண்களுக்கான போட்டி ஜூலை 9, 10ஆம் திகதிகளில் அம்பாறையிலும் துடுப்பாட்டம் மகளிருக்கான போட்டி ஜூலை 11ஆம் திகதி அம்பாறையிலும், துடுப்பாட்டம் ஆண்களுக்கான, போட்டி ஜூலை மாதம் 16, 17ஆம் திகதிகளில் மட்டக்களப்பிலும், மெயவல்லுநா் போட்டிகள் ஓகஸ்ட் மாதம் 13,14 ஆம் திகதிகளில் திருகோணமலையிலும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ற-19)

## 'சுனாமி அனர்த்தச்' சட்டமூலம் குறித்து
# மேன்முறையீட்டு நீதிமன்றம் சபாநாயகருடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சுனாமி தொடர்பான சட்டமூலமானது இலங்கையின் அரசியலமைப்பையும் உள்ளடக்கியுள்ளதான விடயம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் சபாநாயகர் லொக்கு பண்டாரவுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

மேற்முறையீட்டு நீதிமன்றத்தின் இவ்விடயத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது சபாநாயகர் எடுத்துரைத்தார்.

நீதிமன்றம் சார்பில் நீதிபதிகளான ஷாரணி திலகவர்தன. உடலகம சலம் மிஷுவ் ஆகியோர், சுனாமி சட்டமூலத்தில் அரசியலமைப்பு விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனக்கூறி மனித உரிமைகளுக்கான முன்னரங்க சட்டத்தரணிகள் அமைப்பும் குடிமக்கள நம்பிக்கை அமைபும் செய்த முறைப்பாட்டை அங்கு விசாரணை செய்தனர். கூட்டமா அதிபர் கமல சபேசன் இதற்குப் பதிலளிக்க வேண்டும் என முறைப்பாட்டாளர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் வேணடியிருந்தனர். மேற்படி சட்டமூலம் ஏப்ரல் 5ஆம் திகதியன்று நீதிவிவகார மறுசீரமைப்பு அமைச்சரால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது அமைச்சர், சுனாமியால் சிறுவர்களும், இளைஞர்களும், பெற்றோரை இழந்துள்ளனர் இவர்களுக்குத் தகுந்த பராமரிப்பும், பாதுகாப்பும் வழங்குவதை உறுதிசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மேற்படி சட்டமூலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக, பெற்றோரை இழந்த சிறுவர்களுக்குரிய பாதுகாப்பு பற்றிய விடயங்கள் இடம்பெறவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் இதன்படி வழங்கப்படும் இறப்புச் சான்றிதழ்களின் படி உயிருடன் உள்ளவர்களும் இறநதுள்ளனர். என தரவுகள் இடபபடும் வாய்ப்புகளும் இருந்தன. இதன்படி மக்களின் அரசியலமைப்பு உரிமைகள் மறுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்த நீதிபதிகள மேற்படி சட்டமூலத்தில் மீள மாற்றப்படக்கூடிய அரசியமைப்பு விடயஙகள் உள்ளதென உறுதி செய்தனர். (ற-6)

# காத்தான் குடியில் இளைஞனின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

காத்தான்குடிப் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் 10.30 மணி அளவில் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த வீட்டிற்குச சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டெடுத்துள்ளனர். பிரஸ்தாப இளைஞர் இரும்புக் கம்பியினால் அடித்துக்கொலை செய்யப்பட்டிருப்பதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த அதாம்லெவி முகமதுநபி என்ற இளைஞரே சடலமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-8)

# அழகெழல் போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நுண்கலை மன்னறத்தினர் இலங்கைவங்கியின் ஆதரவுடன் கடந்த மார்ச்மாதம் 25ஆம் 26ஆம் திகதிகளில் நடாத்திய "அழகெழல்" போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்ட மேற்படி போட்டிகளில் சித்திரம், இசை, நடனம் நாடகம், சிற்பம் ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சிபெற்றவர்களுக்கு அன்றையதினம் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் சுந்தரம், பி.வகலாலாவும் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் பிரதம முகாமையாளர் எஸ். விக்னராசா கலந்துகொள்வார்கள்.

முகிழ்நிலை ஆசிரியர் கே.மதன கோபன் தலைமையில் இடம்பெறும் இவ விழா கல்லூரியின பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமல நாதனின் ஆசியுரையோடு ஆரம்பமாகும.

இவ்விழாவில் நுண்கலை மன்ற இணைப்பாளர் க.ரட்ணேஸ்வரனின் உரையும் இடம்பெறும்.

தொடர்ந்து போட்டியில் முதலிடம் பெற்ற அரங்க நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் தேர்ச்சிபெற்ற ஓவியர்களினது ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படும்.

சிறப்பு நிகழ்வாக கல்லூரியின் நாடகத்துறையினரின் "கூடி விளையாடு பாப்பா" நாடகமும் இடம்பெறவுள்ளன. (க-7)

# கூட்டமைப்பு அரசியல் முறை எமது சமுதாயத்துக்கு சரிவராது
## பஷீர் சேகுதாவூத்

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசியல் நடைமுறை என்பது முஸ்லிம் சமுதாயத்துக்கு ஒருபோதும் ஒவ்வாத அரசியல் நடைமுறை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்திருக்கிறார்.

ஏறாவூர் மிச் நகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற "மீலாத் விழா"வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

கூட்டமைப்பு அரசியல் நடைமுறை என்பது, பல இன குழுக்களுக்கிடையே அல்லது பெரிய இனங்களுக்கிடையே இருக்கும் வெவ்வேறு விதமான அரசியல் கோட்பாடுகளைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளுக்குள் கொண்டு வரப்படும் ஒரு அரசியல் நடைமுறை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை முஸ்லிம்களின் ஒரு கட்சி, இலங்கை அரசியல் வரலாறறில் கடந்த காலங்களில் பெரும் சாதனைகளை நிலைநாட்டியுள்ளதாகக் குறிப்பிட்ட சேகுதாவூத், "ஒரு கட்சி அரசியல்" என்ற அடிப் படையிலேயே தொடர்ந்தும் தம்மை அரசியலில் முஸ்லிம்கள் முன்னெடுத்துச்செல்ல வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களை, வட மாகாண முஸ்லிம்கள் என்றும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் என்றும் பிரித்து ஆளும் சதி முயற்சி ஒன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சேகுதாவூத் குற்றஞ் சாட்டியுள்ளார்.

துரதிஷ்டவசமாக பேரினவாதிகளின் இப் பிரித்தாளும் தந்திரத்துக்கு சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் துணைபோகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வடககு-கிழக்கு மாகாணம் ஒரே தேசம் என்றும் தேசியம் என்றும் வலியுறுத்தப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகள், முஸ்லிம்களை பிரித்து வைத்துப் பார்க்கும் நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் துணை போகமாட்டார்கள் என்று தாம் நம்புவதாக பஷீர் சேகு தாவூத வலியுறுத்தினார்.

முஸ்லிம் சமூகத்துக்குள் பல அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்து அதன் மூலம் கூட்டு முன்னணி ஒன்றை உருவாக்கி,

அம் முன்னணிக்குள் பலவிதமான கொள்கை வேறுபாடுகளை விதைத்து அதனமூலம் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலத்தை குழி தோண்டிப் புதைப்பதற்கு சதிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-7)

## இன்று ஒரு தகவல்

# கடைசிக் கட்டம்

"தருமர் ஏன் காட்டுக்குப் போனார்?" சூதாட்டத்தில் தோற்றுப் போனார். அதனால் அவர் காட்டுக்குப் போனார். தருமர் முதல்முறை தோற்றுப்போய் திரௌபதியும் அவமானப்பட்ட பின்பு திருதராஷ்டிரன் என்ன செய்தான் தெரியுமா? அவர் இழந்துவிட்ட எல்லாப் பொருட்களையும் தருமரிடம் திருப்பிக் கொடுக்கிறான்.

ஆனால் தருமர் மறுபடியும் சூதாடுகிறார். எல்லாவற்றையும் இழந்து விடுகிறார். அதன் விளைவு 12 வருடம் வனவாசம். ஒருவருடம் அஞ்ஞாதவாசம் புறப்படுவதற்குத் தயாராக இருக்கிறார். அந்த சமயத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சியை வியாசர் கூறவில்லையாம். வில்லிபுத்தூரார் மட்டும் சொல்லியிருக்கிறாராம். ஆன்மிகப் பேச்சாளர் ஒருவர் இதை எடுத்துச் சொன்னார். அது என்ன தெரியுமா?

"காட்டுக்குப் போவதற்கு முன்பு நீங்கள் மறுபடியும் ஒரு முறை சூதாடவேண்டும்" என்று ஒரு குரல் கேட்டது. "யார் இப்படிச் சொன்னது?". என்று திரும்பிப் பார்த்தால்... அது திரௌபதி. "எதற்காக அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்கிறார் தருமர். "நாம் இப்போது அடிமைத்தளையில் இருக்கிறோம். நீங்கள் ஜெயித்துவிட்டால் அது போய்விடும்" என்றார் அவர். "பணயம் வைப்பதற்கு ஒன்றுமில்லையே" என்றார் தருமர். "ஒன்று இருக்கிறது" என்றார் திரௌபதி. "என்ன அது?" என்று கேட்டார் தருமர். "உங்கள் புண்ணியம்" என்றார்.

"சரி! அப்படியே ஆடுகிறேன்" என்று கூறிவிட்டு ஆடுகிறார். முதல் ஆட்டத்தில் தோற்றுப்போனார். இரண்டாவது ஆட்டம் இவர் ஆடவேண்டிய முறை. இவர் காய்களை கையில எடுக்கிறார். அப்போது திரௌபதி இவரது கையைப் பிடித்து "பகவானுடைய பன்னிரு நாமங்களையும் கூறிவிட்டு ஆடுங்கள்" என்று கூறினார். அதே மாதிரிக் கூறிவிட்டு ஆடி ஜெயித்துவிடுகிறார். அடிமைத்தளை நீங்கிப் போய் விடுகிறது.

ஒரு முக்கியமான கருத்தை வலியுறுத்துவதற்குத் தான் வில்லிபுத்தூரார் வியாசர் சொல்லாத இந்தக் கதையை சொல்லியிருக்கிறார் என்று அந்த ஆன்மிகப் பேச்சாளர் விளக்கம் கொடுத்தார்.

மனிதன் பலவிதமாகக் கஷ்டப்பட்டு அதன் பின் கடைசி நிலைக்கு வருகிறான். அப்போது அவன் இருக்கும் நிலையில் கடவுளை நொந்து கொள்ளத்தான் தோன்றுமே தவிர வணங்கவேண்டும் என்று தோன்றாது. ஆனால் அந்த நேரத்திலும் வணங்குபவனுக்குக் கடவுள் என்ன செய்வாராம் அவன் செய்யும் தீமை மூலமாகவே உதவி செய்து விடுகிறாராம். சூதாட்டம் என்பது ஒரு புண்ணியமான காரியமா? அது ஒரு தீய காரியம்தான். இருந்தாலும் தருமர் அதில் ஜெயிப்பதற்குக கடவுள் உதவி செய்கிறார் என்று புரிந்துகொள்ள வேண்டுமாம். அதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கதையாம்.

அதற்காக திருடச் செல்பவர்கள் எல்லோரும் கடவுளை வணங்கிவிட்டுச் சென்றால் காரியம் கைகூடும் என்று நினைத்துவிடக் கூடாது. கைகூடும் ! எப்படி? விலங்குமாட்டினால இரண்டு கையும் ஒன்றாகக் கூடித்தானே ஆக வேண்டும? அப்படித்தான் கைகூடும்.

ஒரு ஆள் பத்து ரூபாய்க்கு பத்து அதிஷ்டலாபச் சீட்டு வாங்கினார். சீட்டிழுப்பு முடிந்து முடிவு வெளியானது. இவர் பத்திரிகை வாங்கிப் பார்த்தார். பரிசு விழவில்லை. மிகவும் கவலைப்பட்டார். "கவலைப்படாதீர்கள் பத்து ரூபாய் தானே போனால் போகட்டும்" என்றார். அவரது நண்பர் அது எப்படி பத்து ரூபாய் என்று சொல்கிறீர்கள்? எனக்கு ஐம்பது ரூபாய் நஷ்டம் என்றார். 'எப்படி?' என்று கேட்டார் நண்பர்.

"பத்து சீட்டுக்கும் பரிசு விழவேண்டும் என்று வேண்டிக் கொண்டு 10 தேங்காய் வாங்கி உடைத்திருக்கிறேன்" என்றார். இவருக்கெல்லாம் கடவுள் எப்படி உதவி செய்வார்? இவர் தான் தேங்காய் கடைக்காரருக்கு உதவி செய்திருக்கிறார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மானிப்பாய் பிரதேச சபைக்கு பவுசரும் நீரிறைக்கும் இயந்திரமும்

(பொன்னாலை)

நிக்கொட் நிறுவன நிதியுதவித் திட்டத்தின் கீழ் மானிப்பாய் பிரதேச சபைக்கு தண்ணீா பவுசர் ஒன்றும் அதற்கான நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றும் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

நிக்கொட் நிறுவனத்தின் யாழ். மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளா க. நவரட்ணராஜா தண்ணீா பவுசர் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் ஆகியவற்றை மானிப்பாய் பிரதேசசபை களஞ்சியப் பொறுப்பாளரிடம் அண்மையில கையளித்தார்.

இதேவேளை, மானிப்பாய் பிரதேச சபையின் தேவையைக் கருத்திற் கொண்டு மிகவிரைவில் உழவு இயந்திரம் ஒன்றையும் நிக்கொட் நிறுவனம் வழங்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (ற-49)

## சிறப்பாக இடம்பெற்ற ஜயந்தன் படையணியின் 12ஆம் ஆண்டு நிகழ்வு

(மட்டக்களப்பு)

கடற்கரும்புலி கப்டன் ஜயந்தனின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வும் ஜயந்தன் படையணியின் 12ஆம்ஆண்டு நிறைவு நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

மட்டக்களப்பு குடும்பிமலைக் கோட்ட பொது விளையாட்டு மைதானத்தில் முற்பகல் இடம்பெற்ற நிகழ் வில் தமிழீழத் தேசியக் கொடியினை மட்டு. அம் பாறை சிறப்புததளபதி கேணல் பானு ஏற்றி வைக்க; ஜயந்தன் படையணியின் கொடியினை படையணி யின் தளபதி ஜெயார்த்தன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து போராளிகளுக்கிடையில் கால்பந்து, மென்பந்து உட்பட விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெறறன. இந்த நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ மகளிா் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலிததேவன், படைத்துறை பயிற்சி ஆசிரியர் மனோ மாஸ்டா, மாவீரர்கள் போராளிகள் குடும்ப நலன் காப்பக பொறுப்பாளர் திருக்குமரன், மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரயன், தளபதி ராம், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா உட்பட போராளிகள பலரும் கலந்துகொண்டனர்.

ஜயந்தன் படையணியின் அணிவகுப்பினை மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு, தளபதி ராம், ஜயந்தன் படையணியின் தளபதி ஜெயார்த்தன், தளபதி கீர்த்தி ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து, ஜயந்தன் படையணி மாவீரர்கள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து ஜயந்தன் படையணியின் சிறப்பினை வெளிப்படுத்தும் போராளி இசைப்பிரியனின் இசையில் உருவான "வெல்லும் வரை செல்வோம்" என்ற பாடல் இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. (ற-4)

## மகசீன் சிறையில் தாக்கப்பட்ட தமிழ்க் கைதிகளை இடமாற்ற கிஷோர் எம்.பி நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் கைதிகளால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கபபடடுள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் அங்கு சென்று பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகளை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநா தன் கிஷோர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவர் இது தொடர்பில் விளக்கமளிக்கையில், மகசீன் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஐவர் இரண்டு சிங்களக் கைதிகளினால் தாக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக நான் பாராளுமன்றத்தில் இருக்கும்பொழுது தொலைபேசி மூலம் எனக்கு அழைப்பு வந்தது. அதன்படி நேற்றுமுன்தினம் நான் இவர்களைச சந்திப்பதற்காக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூபி மர்சூக்கை சந்தித்து அவர் மூலமாக மகசன் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள சிரேஷ்ட அத்தியட்சகரை சந்தித்து தாக்கப்பட்ட கைதிகளை சந்தித்தேன்.

அந்த 5பேரில் இருவர் காயப்பட்டிருந்தனர். அதில் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றும் தங்களை களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றும்படியும் தாக்கப்பட்ட செல்லத்துரை கிருபாகரன், அருளம்பலம் சந்திரமோகன் ஆகியோர் என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதேபோல் பி.கங்காதரன், வி.நித்தியானந் தன், என.சிறிதரன் ஆகிய மற்ற மூவரும் தங்களை இச் சிறைச்சாலையிலேயே பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டனர்.

அதறகிணங்க நான் சிறைச்சாலை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு இது சம்பந்தமாக மாற்றம் செய்யும்படி கேட்டேன். அதற்கு அவர் உடன்பட்டு தனக்கு கடிதம மூலம் அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதறகிணங்க அதனை நான் உடனடியாக மேற்கொண்டு அவாகளை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளேன் என்றார். (ற-4)

## விபத்தில் பாதிக்கப்படுவோருக்கு உடன் சிகிச்சையளிக்க தீயணைப்பு சேவைகள் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

தீயணைப்பு சேவைகள் திணைக்களம் விபத்துக்களால் பாதிக்கப்படுவோரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன்னர் வைத்திய சிகிச்சை அளிக்கும் சேவையைத் தொடங்கியிருக்கின்றது.

இந்த முயற்சிக்கு அரசாங்கத்தின் உதவிகளும் கிடைத்திருப்பதாகப் பிரதான தீயணைபபு சேவை உத்தியோகத்தரான ஜே.கனங்கர தெரிவிததார்.

இதனை கொழும்பு தேசிய வைத்தியசாலை, தீயணைப்பு சேவைகள் திணைக்களம், சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை ஆகியவை கூட்டாக ஒருங்கிணைந்து இதனை முன்னெடுக்கவுள்ளன.

இதுதவிர தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணைக் குழுவும் அவசர அழைப்புகளை மேற்கொளளக் கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் .

இந்த நடைமுறை முதலில் கொழும்பு மாவட்டத்தில் அமுல் செய்யப்படவுள்ளது. (ற-5)

## கைத்தொழில் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்க நடவடிக்கை

(பொன்னாலை)

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில உள்ள கைத்தொழில் நிறுவனங்களுக்கு கைத்தொழில் முயற்சிகள் சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கென வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் ஓர் ஒழுங்குபடுத்தும் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் திருமதி எஸ். மாணிக்கம் இக்குழுவின் தலைவராகச் செயற்படுவார். மேற்படி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயற்படடு வரும் கைத்தொழில் முயற்சியாளர்கள் பிரதேசசபையினால வழங்கப்படும் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று உரிமங்களுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ற-49)

## மோசடி குற்றச்சாட்டின் கீழ் மூன்று அரச அதிகாரிகள் கைது

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு மீண்டும் செயற்படத் தொடங்கிய பின்னர் மோசடிக் குற்றச்சாட்டுக்களின கீழ் 3 அரசாங்க அதிகாரிகளைக் கைது செய்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் எல்.கே.சந்திரகாந்த தெரிவித்தார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முறையாக செயற்படாத காலத்தில் ஸ்தம்பிதமடைந்த விசாரணைகளையும் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததன் காரணமாக ஊழல் மற்றும் மோசடிகள் குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் கடந்த சில மாதங்களாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் கடந்த மார்ச் மாதம் நடுப் பகுதியிலிருந்து அவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்குரிய நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இருப்பிடங்களை இழந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பது தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் பல மேற்கொண்டதன் பின்னர் கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு, கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல்துறை அமைச்சு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு என்பவற்றுக்கு இடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இவ் வைபவம் கடந்த செவவாய்க்கிழமை நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் துறை அமைச் சில் வைத்து நடைபெற்றது.

இவ் வைபவத்தின் போது அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, தினேஷ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப் ஆகியோரும் மேற்படி அமைச்சுகளைச சேர்ந்த செயலாளர்கள் உட்பட பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இவ வைபவத்தின் போது நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான 1000க்கும் அதிகமான இல்லங்களை அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

யாழ்ப்பாணம்

# கருவில் ஏற்படும் மனபாதிப்பு

கருவில் ஏற்படும் மன பாதிப்பு என்றால் என்ன? அதற்கும் மனநோய்க்கும் என்ன சம்பந்தம் என்று யோசிக்கின்றீர்களா?

கஷ்ட காலங்களும், மனப்பிரச்சினைகளும் இந்த உலகத்தில் பிறந்து அடிபட்ட பின்னர்தானே ஏற்படுகிறது.

பிறந்த பின் ஏற்படும் மன பாதிப்பு ஒரு வகை, பிறப்பதற்கு முன் தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே ஏற்படும் மன பதிப்பு மறுவகை!

பயம், படபடப்பு, பாதுகாப்பின்மை இவை மூன்றும் பெரும்பாலும் மன நோய்கள் ஏற்பட அடிப்படைக் காரணமாக அமைந்துவிடுகின்றன. இத்தகைய பயங்கள் எந்த வயதிலும் தோன்றலாம் ஆனால் அவை உடனே வெளிவர வேண்டும் என்ற அவசியமில்லை. ஏதாவதொரு காலகட்டத்தில், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் திடீரென வெளிப்படுகின்றன.

ஆராயும்போதுதான் அந்த மன பாதிப்பு எந்த வயதில், எந்தக் காரணங்களால் ஏற்பட்டது? யாரால் ஏற்பட்டது? எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது? என்று கண்டறிய முடிகிறது. இதைத்தான சூழ்நிலை சிக்கல்களால் ஏற்படும் மன பாதிப்புகள் என்கிறோம். இந்த வகை மன பாதிப்புகள் எந்தவகை மருந்துகளுக்கும் கட்டுப்படுவதேயில்லை.

கருவறையும் ஒரு கல்விக்கூடம் தான். ஆம் குழந்தை பயிலும் முதல் பள்ளிக்கூடம்தான் எனலாம்.

ஆமாம், தாயிடமிருந்து குழந்தை உணவை மட்டுமா பெறுகிறது? உணர்வகளையும் சேர்த்தே அல்லவா பெறுகிறது. தாயின் எண்ண அலைகள் அப்படியே குழந்தையைச் சென்றடைகின்றன. கல்வியறிவும் சிறந்த கலைத்திறன்களும கொண்டதாய், கருவுற்ற காலத்தில் அந்தக் கல்வியிலும் கலைகளிலும் மனம் ஒன்றி ஈடுபடும்போது, அவற்றில் மெய் மறந்து லயிக்கும்போது அந்தக் கல்வியும், கலைகளும், அறிவும் அப்படியே கருவிலிருக்கும் குழந்தையைச் சென்றடைகின்றன.

கருவிலிருக்கும் குழந்தை ஐந்தாவது மாதத்திலேயே கேட்கும் திறனையும், கிரகிக்கும் திறனையும் பெற்றுவிடுகிறது. தன்னைச் சுற்றி நடப்பவற்றை தாயின் மூலமாக குழந்தை அறிந்துகொள்கிறது. கருவறையில் அறியப்படும் கலைகள் கல்லறை வரை தொடருகின்றன. கல்வியை மட்டுமல்ல, தாயின் கவலைகளையும், கண்ணீரையும் கூட குழந்தை கவனிக்கிறது.

அது மனதின் மௌனமான சோகம். அந்தச் சோகம் கருவைப் பாதிப்பது



கருவில் இருக்கும் குழந்தைகும் தெரியாது, தாய்க்கும் தெரியாது. இப்படி சோகராகங்களைத் தினமும் குழந்தை கேட்க நேர்ந்தால்... எனக்கு வாழ்வோ, நிம்மதியோ இல்லை. இதில் இந்தக் குழந்தை வேறு தேவையா என்று தாய் மனமுடைந்து அழும்போது, அந்த சோகம் மனதளவில் பாதிக்கப்படுகிறது. ஒரு பாதுகாப்பின்மை, பய உணர்ச்சி அந்தக் குழந்தையின் ஆழமனதில் கருவறையிலேயே ஆழமாக, அழுத்தமாக எழுதப்பட்டு விடுகிறது.

பயமும் பாதுகாப்பின்மையும்தான் மனநோயின் அடித்தளம். இவ்வாறு கவலைகளுடன், கண்ணீருடன் தாய் போராடும்போது குழந்தை நிரந்தரமாக கவலையும் பொழுதொரு பயமுமாய் மெல்ல மெல்ல வளர்கிறது.

அது இந்த உலகத்திற்கு வரு முன்பே மனதால் அடிபட்டு, பயத்துடனேயே, பாதிப்புடனேயே பிறக்கிறது. இந்தப் பயங்களை காலம் அழிப்பதில்லை. அப்படி அந்தக் குழந்தை பாதிக்கப்பட்டுள்ளது என்பது யாருக்கும் தெரிவதுமில்லை. எத்தனையோ வருடங்கள் கழித்து இந்தப் பயங்கள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனபாதிப்பாக வெளிப்படுகிறது.

### கருவில் மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தையை கண்டுபிடிப்பது எப்படி?

*இப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள் யாருடனும் ஒட்டாமல், கலகலப்பாக இல்லாமல் சோர்ந்து காணப்படுவார்கள்.

*ஏதோ ஓர் இனம் தெரியாத பயம், எப்போதும் இவர்களிடம் காணப்படும்.

*சிறு வயதிலேயே தாழ்வுமனப்பான்மை, மனச்சோர்வு இவற்றால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள். ஆனால் வெளியே தெரியாது.

*சில குழந்தைகள் காரணமின்றி கோபப்படுதல், அளவுக்கு மீறிய வெறிச் செயல்களில் ஈடுபடுதல், வக்ரமான எண்ணங்கள் இவற்றால் பாதிக்கப்பட்ட வாய்ப்புகள் உண்டு.

இளம் குற்றவாளிகளாக சீர்திருத்தப பள்ளிகளில் இருக்கும் குழந்தைகளில் பலர் இப்படி கருநிலையில் மனம் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பது ஆய்வுகளில் தெரியவருகிறது.

* இத்தகைய சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். ஒரு நேரம் இருக்கும் புத்தி, நடத்தை மறு நேரம் இருக்காது.



*சிலர் படிப்பபில் சிறந்து விளங்கினாலும் ஏதாவதொரு நடத்தை ஒவ்வொரு விதமாக மாறுபட்டு ஒரு வித்தியாசமான குழந்தையாகக் காணட்படும். ஆனால் இதை நாம் கவனிப்பதில்லை.

*சுருக்கமாகச் சொன்னால் இப்படிப் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நடத்தை ஒவ்வொரு விதமாக மாறுபட்டு ஒரு வித்தியாசமான குழந்தையாகக் காணப்படும். ஆனால், இதை நாம் கவனிப்பதில்லை.

இது குறித்து ஆய்வுகள் உலகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

### ஹிப்னோதெரபி முறையில் கருநிலை மனபாதிப்பை ஆராய்தல்

உள்மனம்தான், அந்த உள் மனதில விதைக்கப்படும் எண்ணங்கள்தான் ஆழமாக அழுத்தமாகப் பதிந்து ஒருவரை மனநோயாளியாகவோ, செம்மையான மனம் கொண்டவராகவோ மாற்றுகிறது. உள்ளம் என்பது சரியாக இருந்தால் உலகம் முழுவதும் இனிக்கிறது.

இந்த உள்மனதை ஹிப்னோ முறையில் நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கடந்தகாலத்தை நோக்கிச் செல்லுதல் முறையில், வயதைப் படிப்படியாகக் குறைத்து அவருடைய கருநிலை பருவத்திற்குக் கொண்டு சென்று, அப்போது ஏற்பட்ட அனுபவங்களை ஆராய முடியும்.

*உதாரணத்திற்கு:-*

செல்விக்கு வயது 18. 3 வயது முதலே நெஞ்சுவலி, படபடப்பு, பயம் என்று ஒரே பிரச்சினை. இது இதயம் சம்பந்தப்படட பிரச்சினையாக இருக்கும் என்று மருத்துவர்களின் ஆலோசனைப் படி எல்லா டெஸ்டுகளும் எடுத்து, எல்லாம் நோமல் என்று வந்துவிட்டன.

இதய வலிக்குத் தரப்படட மருந்துகள் தற்காலிகமாக அந்த வலியை நிறுத்தினவே தவிர நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை. செல்வியால் கடுமையாக எதையும் செய்யமுடியாது. தொடர்ந்து 4 மணி நேரம் படிக்கமுடியாது. ஞாபக மறதியும்



வந்து வாட்டும். படித்தால் கண் நரம்புகள் இழுப்பது போல் இருக்கும். தலை பாரமாகிவிடும்.

ஆனால் உடலளவில் செல்விக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பது உறுதியாகத் தெரிந்தது. இது மனம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கும் என்ற மருத்துவர்களின் ஆலோசனைப் படி மனநல சிகிச்சைக்காக செல்வி வந்தபோது மிகவும் டென்ஷனாக குழப்பத்துடன் இருந்தாள்.

மனம் சம்பந்தப்பட்ட பிரச்சினை எப்படி உடல் நோயாக மாறும் என்று கேட்கத் தோன்றுகிறது இல்லையா? ஆமாம், மனம் பாதிக்கப்படும்போது உடலும் பாதிக்கப்படுகிறது. இதை "உளம் சார்ந்த உடல் நோய்கள்" (**Pshcho Somatic Discorders**) என்கிறோம். அதாவது மனவேதனை காரணமாக ஏற்படும் உடல் நோய்கள். "வியாதி உடலிலே- அதற்கான ஆணிவேர் மனதிலே" என்பது போல செல்விக்குப் மனப்பிரச்சினையும், உடல் பிரச்சினையும் சோந்தே இருந்தது. வாட்டியது.

### ஹிப்னோ ஆய்வில் செல்வி சொன்னது என்ன?

செல்வியின் வயது "ஹிப்னோ ரிக்ரஷன்" முறையில் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1 வயதுவரை ஆராயந்தும், எந்தத் தடயமும் கிடைக்காததால் கருநிலை பருவத்திற்கு செல்வி அழைத்துச் செல்லப்பட்டாள். அவள் அப்போது சொன்னது,

"கருவறை எனக்கு சிறை போல இருட்டாக இருந்தது. தினமும் நான் கேட்டதெல்லாம் அப்பாவின் ஏச்சுக்கள், அம்மாவின் அழுகை. துயரம் தாங்காமல் அம்மா அழுது அழுது அவளுக்கு நெஞ்சு வலியே வந்துவிடும்.

எப்போது அப்பா வீட்டிற்கு வரு



வாரோ, என்ன செய்வாரோ என்ற திகில் அம்மாவிடம் எப்போதும் இருந்தது.

'நம் குடும்பம் இருக்கும் இலட்சணத்தில் இந்தக் குழந்தை தேவை தானா? இதை அழித்துவிடு' என்று பல முறை சொல்லியும் நீ கேட்கவில்லை என்று வெறித்தனமாக அம்மாவின் கழுத்தை அப்பா நெரிக்க வந்தார்.

*(தொடரும்...)*

## அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபை அனலை தீவு உப அலுவலக நூலக வாசகர் வட்டத்தால் அனலைதீவு பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களும் ஒலி, ஒளி நாடாக்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (ற)

## வீதி சேதம்

(பொன்னாலை)

அராலி - மேற்கு நொச்சியம்பதி வீதி கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகத் திருத்தப்படாதிருந்து வருகின்றது.

பாரிய குன்றும் குழியும் நிறைந்த இவ் வீதியால் போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அராலி மேற்குக் கிராமத்தின் பிரதான வீதியாக அமைந்திருக்கும் இவ்வீதியில் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, தென்னிந்தியத் திருச்சபை வழிபாட்டு ஆலயம், பிரசித்தி பெற்ற நொச்சிக்காட்டு விநாயகர் ஆலயம் ஆகியவை அமைந்திருக்கின்றன.

எனவே இவ் வீதியை வெகு விரைவில் திருத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (ற-49)

* * *

(பொன்னாலை)

வட்டு - தெற்கு பேச்சியம்பாள் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருப்பதால் இவ்வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

கிராமத்தின் முக்கிய வீதிகளில் ஒன்றாகிய மேற்படி வீதியைத் திருத்தித்தருமாறு வலி - மேற்கு பிரதேச சபை, வலி - மேற்கு பிரதேச செயலகம் ஆகியவற்றிற்கு அவ்வூர் மக்கள் சார்பாக கோரிக்கைகள் அனுப்பியிருந்தபோதும் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-49)

## அலங்காரத் திருவிழா

கொக்குவில் கிழக்கு காட்டுப்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

தினமும் இரவு 8.30 மணிக்கு 'கந்த புராணம்' பற்றி நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கான கதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார். (ற)

## தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வேலணை புளியங்கூடல் இந்தன் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அடுத்த நாள் காலை 10மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறு[illegible]

திருவிழாவை முன்னிட்டு [illegible] மாலை 6மணிக்கு கான கதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சி.வை.நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்பட்டு வந்த மகாபாரதம்' பற்றிய தொடர் இசைப்பேருரை தீர்த்தத்திருவிழாவன்று தர்மர் பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாகும். (ற)

## விவசாயக் குழுக் கூட்டம்

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட விவசாயக குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ் - மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விவசாயக் குழுக் கூட்டத்தில் பயிர் உற்பத்தி, பெரும்போகப் பயிர்ச செய்கை, மர நடுகைத் திட்டம், கால் நடை அபிவிருத்தி மீன்பிடி மற்றும் பனை தென்னை அபிவிருத்தி உட்படப் பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராயப் படவுள்ளது. (ற-49)

## கொடிக்கம்பம் அன்பளிப்பு

பண்ணாகம் - விசவர்த்தனை முருகமூர்த்தி ஆலயத்திற்கு வெளிநாட்டில் வசிக்கும் அன்பர் ஒருவர் வெள்ளியினாலான கொடிக்கம்பம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இக் கொடிக்கம்பம் சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்டது.

மேற்படி கொடிக்கம்பத்தை அமரர் வல்லிபுரம் துரைசிங்கம் ஞாபகார்த்தமாக சுவிஸ் நாட்டில் வசிக்கும் அவரது மகன் ஒருவரே அனபளிப்பாக வழங்கியுள்ளார் (ற-49)

# வெயிலுக்கு தேவையா மென்பானங்கள்?

கோகோ கோலாவின் பிஎச் மதிப்பு 3.4 ஆகும். பற்களையும் எலும்புகளையும் கரைக்க இந்த அமிலத்தன்மை போதும். பொதுவாக உடலானது 30 வயதுக்கு மேல் எலும்புகளின் வளர்ச்சியை நிறுத்திவிடுகிறது. அதன் பின்பு நாம் உண்ணும் உணவின் அமிலத்தன்மைக்கு ஏற்ப ஆண்டுதோறும் 8முதல் 18 வத எலும்பானது கரைந்து சிறுநீர் வழியாக வெளியேறுகிறது.

கரையக்கூடிய கல்சியக் கூட்டுப் பொருட்கள் தோல், நரம்புகள், உடல் உறுப்புகளால் எடுத்துக்கொள்ளப்படும். இது சிறுநீரகக் கல் போன்ற கோளாறுகளை உருவாக்குகிறது.

இந்த மென்பானங்களில் விற்றமின் தாதுக்கள் போனற எந்தச் சத்தும் கிடையாது. அவற்றில் இருப்பதெல்லாம் அதிகபட்ச சர்க்கரை, கார்போனிக் அமிலமும் வேதிப் பொருட்களும், வண்ணங்களும் மட்டும்தான்.

சிலர் உணவுண்ட பின்னர் குளிர்ந்த மென்பானங்களை அருந்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதன் விளைவு என்ன தெரியுமா?

நமது உடலுக்குச் சாதாரணமாக 37 டிகிரி செல்சியஸ் வெப்ப அளவு தேவை. அவ்வாறு இருந்தால்தான் உணவு செரிக்கும். ஆனால் இந்த குளிர் மென்பானங்கள் பெரும்பாலும் 0 டிகிரி அளவுக்கு குளிர்ந்திருக்கும். இதனால் உணவைச் செரிக்கச் செய்யும் என் சைம்கள் நீர்த்து செரியாமை ஏற்படுகிறது. மேலும் அது உணவைப் புளிக்க வைத்து அழுகச் செய்கிறது. வாயுவை உற்பத்தி செய்து உணவை நஞ்சாக மாற்றுகிறது. இந்த நஞ்சு குடலால் உறிஞ்சப்பட்டு இரத்த ஓட்டம் மூலம் உடல் முழுவதும் பரவி பல நோய்களுக்குக் காரணமாகிறது.

மேலும், காற்றேற்றப்பட்ட இந்தப் பானங்களை அருந்துவதால் என்ன கிடைக்கிறது? கரியமில வாயுதான் வயிற்றை நிரப்புகிறது. கரியமில வாயுவை அதிகமாகக் குடித்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது.

ஒருபல்லை ஒரு குப்பிப் பெப்சியில் போட்டு வைத்தால் பத்து நாட்களில் அது கரைந்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

விலை கொடுத்து ஆபத்தை வாங்குவதைவிட, இயற்கை எமக்களித்துள்ள இளநீர், எலுமிச்சை சாறு போன்றவற்றைப் பருகுவது ஆரோக்கியத்திற்குச் சிறந்ததாகும்.

# மனித மூளையின் இடஒதுக்கீடு




மிகவும் இளம் வயதிலேயே பார்க்கும் திறன் இழந்த பலருக்கும் காதுகளில் கேட்கும் திறன் கூர்மையாக இருக்கும் என்ற செய்தியினை நாம் அறிவோம். இச் செய்தி இன்று நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மையாகிவிட்டது.

கனடாவிலுள்ள மாண்டரியல் பல்கலைக்கழக உடல் மருத்துவத்துறை ஓர் ஆய்வு நடத்தியது. கண் பார்வையுள்ளோரையும், பார்வையற்றோரையும் ஓர் இருட்டு அறையில் வைத்துப் பூட்டினர். அறையில் பத்துக்கும் மேற்பட்ட ஸ்பீக்கர்களைப் பொருத்தி ஏதேனும் ஒன்றில் ஒலி வரும்படி செய்தனர். எந்தப் பெட்டியிலிருந்து இசை வருகிறதென இரு பிரிவினையும் கேட்டபோது, கண்பார்வை உள்ளோர் மிகவும் தடுமாற, பார்வையற்றவர்களோ ஒலி வரும் திசையைத துல்லியமாகக் கவனித்து அது வருகின்ற திசையையும் மிகச்சரியாகக் கூறியுள்ளனர்.

# உங்களுக்குத் தெரியுமா?

மனிதனின் சராசரி ஆயுட்காலம் 70 ஆண்டுகள். இவற்றில் 21 ஆண்டுகளை உறக்கத்திலேயே கழிக்கிறான்; 14 ஆண்டுகள் ஓய்வெடுக்கப் பயன்படுத்துகிறான்; சினிமா, நாடகம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுக்காக 7 ஆண்டுகளைச் செலவிடுகிறான். உணவு உண்பதற்காக 3 ஆண்டுகள் போய்விடுகின்றன. பஸ், ரயில் போன்ற போக்குவரத்துச் சாதனங்களுக்காக 13 ஆண்டுகள் காத்திருப்பதிலேயே செலவிட்டு விடுகிறான். இப்படி பாதியளவு ஆயுட்காலம் வீணாகிவிடுகிறது.

எஞ்சியுள்ள காலங்களையாவது சாதிப்பதிலும், மனிதநேயத்திற்கும், இறைவனைத் தேடுவதற்கும், மக்களை நேசிப்பதற்கும் செலவிட்டால் நல்லது தானே!

# வாய்விட்டுச் சிரித்தால் வலிவிட்டுப் போகுமா?

சிரிப்பதால் நமது உடம்பிலுள்ள பல விதமான தசைகளும் நன்கு இயங்குகின்றன.

மேலும், உடம்பில் பலவித இரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன. கல கலவெனச் சிரிப்பதால் உடலில் பல நல்ல விளைவுகள ஏறபடுகின்றன. மன அழுத்தம் இருப்பதால் வாயுப்பிடிப்பு, தலைமுடி உதிர்தல், நரம்புத் தளர்ச்சி, இருதய நோய், மூச்சுப்பிடிப்பு, மன வியாதிகள், மூட்டு வலிகள் என பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவை சிரிப்பதால் குணமாகின்றன. மன அழுத்தம் குறைவதால் உடல் இலேசாகிறது. புத்துணர்ச்சி ஏற்படுகின்றன. மூளையின் செயல்பாடுகள் அதிகரிக்கின்றது. நரம்புகள் வலுவடைகின்றன. உமிழ்நீர் அதிகம் சுரக்கின்றது. இதனால் அதிலுள்ள எதிர்ப்பு நுண்ணுயிர்களின் அளவு கூடுதலாகி கிருமிகளுடன் போரிட்டு, நுரையீரல் நோயிடமிருந்து காப்பாற்றுகின்றன.

# அலட்சியம் வேண்டாம்

வேலைப்பளு, நிர்ப்பந்தங்கள் காரணமாக அலுவலகங்களுக்கும், பாடசாலைகளுக்கும் செல்பவர்கள் காலை உணவைப் புறக்கணித்து அதனை ஈடுகட்டும் முகமாக மத்தியானமும், இரவும் அதிகமாகச் சாப்பிடுவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது.

கொழுப்புசசத்து உட்பட காலை உணவுதான் நன்கு சமிபாடடைந்து உடலால் அகத்துறிஞ்சப்படுகின்றது. மேலும் காலையில் போதியளவு உண்டால்தான் இரவில 'லெப்டின்' என்ற ஹோர்மோன் போதியளவு உற்பத்தியாகும். இது தூக்கத்தில் பசியைக் கட்டுப்படுத்தி காலையில் நன்றாகப் பசி எடுக்க இயற்கை செய்துள்ள ஏற்பாடாகும்.

இரவு அதிகம் சாப்பிடுவதால் காலையில் 'லெப்டின்' அதிகமாகச் சுரந்து பசியையும சமிபாடடைவதையும் பாதிக்கும். உடலின் சில நுட்பமான உறுப்புகள் பகலில் சுறுசுறுப்பாகவும் இரவில் மெதுவாகவும் செயறபடும் விதமாக அமைத்துககொள்வதே ஆரோக்கியத்துக்கு உகந்தது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-58

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | |
| 5 | | | | | ■ | ■ |
| 6 | | | ■ | 7 | | 8 |
| ■ | 9 | | | | ■ | |
| 10 | | | ■ | 11 | 12 | |
| 13 | | ■ | 14 | | | |
| | ■ | 15 | | ■ | 16 | |

*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 58**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
..........................................
..........................................

இங்கே வெட்டுக ------------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)தக்கனின் யாகத்தை அழிக்கச் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவர். (5)தாக்கம் கூடிய மஞ்சட்காமாலை நோயை இப்படியும கூறுவர். (6)முகத்தல் அளவு ஒன்று (வ.இ). (7)சுவாசத் தொகுதியில் முதல் உறுப்பு. (9)இது என்றால் அது சைவம், தமிழ் வளர்த்த ஆறுமுகனார் அவர்களையே குறிக்கும். (10)ரதியின் கணவன். (11)இது உள்ளவன் பலவான்(குழம்பியுள்ளது). (13)உண்பது என்பது ஏவலாக உள்ளது. (14)இஸ்லாமியரின் விசேட பண்டிகைகளில் ஒன்று (வ.இ). (15)பெரியோரிடம் இது வேண்டி அவர்களின் பாதங்களைப் பணிவது மரபு. (16)இது போனால் சொல் போகுமென்பர்.

## மேலிருந்து கீழ்

(1)பஞ்சபாண்டவர்களில் பலசாலி. (2)சிறீரங்கத்தில் எழுந்தருளிய விஷ்ணுமூர்த்தி. (3)சூரியனின் வேறொரு பெயர். (4)படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரிபவரை இப்படியும் அழைப்பர். (8)'கிருகப்பிரவேசம்' என்றும் சொல்லலாம். (10)சுற்றுச்சுவர் இப்படிக் கூறுவர். (12)'படைக்குப் பிந்தினாலும் இதற்கு முந்து' என்பர் (கீ.மே). (14)'... த்துக்கொழுத்துப் போ' என்று கூறுவதுண்டு (கீ.மே).

## குறுக்கெழுத்துப் போட்டி இல.56 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1பகவத்கீதை 5.லட்டு 7.கடை 8.வைகறை 9.மகான் 11.பூச்சி 12.பூசா 13.சரியை 14.சுரம் 15.சம்பவம்.

**மேலிருந்து கீழ்**

1.பலகணி 2.கட்டை 3.வடு 4.கீசகன் 8.வைகாசி 9.மச்சம் 10.சம்சாரி 11.பூரி 12.பூரம் 13.மாயை 14.பசு.

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- பொ.கனகசிங்கம்
சங்கானை கிழக்கு,
சங்கானை.


**இரண்டாம் பரிசு** :- அ.அருந்ததி
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

**மூன்றாம் பரிசு** :- வ.மன்னர் அன்ரனி
16, சென்ற்யேம்ஸ் மேற்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


**போட்டியில கலந்துகொண்டு பாராட்டுபபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

த.புஸ்பராணி, தம்பசிட்டி. உ.குருசங்கர், கொக்குவில். சு.சக்திவேல், வட்டுக்கோட்டை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. பி.சிவறூபி, சாவகச்சேரி. ந.வினோதரன், மிருசுவில். தே.சங்கவி, கரவெட்டி. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. ச.கந்தசாமி, சண்டிலிப்பாய். இ.யூஜினா மரியா, குருநகர். வே.சுபாஷினி, மானிப்பாய். சி.ஜெயருக்ஷன், சுன்னாகம்.

# பழந்தமிழர்களின் காலடிச்சுவடுகள்



இயற்கையை எதிர்த்துப் போராடி வளர்ந்ததே மனித வரலாறு. இயற்கை, கடுமையான தாக்குதலை மனித சமுதாயத்தின் மீது தொடுக்கும்



போதெல்லாம் துவண்டு விழும் மனிதன், அதேவேகத்தில் திரும்ப எழுந்து நின்று, தன்னையும் தன் சக மனித இனத்தையும் பாதுகாத்துக்கொள்ளக் கடுமையாகப் போராடுகிறான். சுனாமிக்குப் பின் மனித குலம் எழுந்து நிற்க முயற்சிப்பதும் அவ்வகையிலேயே. பல்லாயிரக் கணக்கான உயிர்களைத் தூககி சாப்பிட்ட சுனாமிக்கு எதிராக களம் அமைக்க உலகம் முழுவதிலும் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அதில் ஒன்று, சுனாமி அலைகளைக் கண்டறியும் கருவிகளைக் கடலுக்குள் நிறுவுவது (பெரும்பாலான நாடுகள இத் திட்டத்தைத்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது).

சுனாமிப் பேரலைகள் கடலில் உருவாகும்போதே, கடலுக்குள் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் அடுத்த நிமிடமே கரைக்குத் தகவல் அனுப்பி விடும். கரையோரங்களில் வசிப்பவர்கள் வீடு - வாசல் அனைத்தையும் விட்டு ஓடிப்போய் பிழைத்துக் கொள்ளலாம்.

ஆனால் இலங்கையில் விடுதலைப்புலிகள் கொஞ்சம் வித்தியாசமான முயற்சியில் இறஙகவுள்ளதாக அறிவித்துள்ளனர். மண்ணைப் பயன்படுத்தி கடற்கரையோரத்தில் சுவர் அமைக்கப் போவதாக விடுதலைப்புலிகள் அமைப்பின் பொறியியல் மற்றும் கட்டுமானப்பிரிவு அறிவித்துள்ளது. முதலில் கேட்டால யாருக்கும் சிரிப்பு வரும். பொங்கிவரும் கடல் அலைகளை மண்வைத்து தடுக்க முடியுமா? எனக கேள்வி எழுப்பலாம். இந்த கேள்விக்கு விடை தேட வேணடுமானால், வரலாற்றைக் கொஞ்சம் பின்னோக்கிப் பார்த்தால் ஒரு விஷயம் புரியும்.

தமிழர்கள் அந்தக் காலத்தில், இன்றைக்கு நாம் மலைத்துப் போய்ப் பார்க்கும் தொழில்நுட்பங்களை மிகச் சாதாரணமாக அன்றைக்குச் சாதித்திருக்கிறார்கள். அவ்வகை தொழிலநுட்பததைத்தான், இன்றைக்கு விடுதலைப்புலிகள் பயன்படுத்தப்போவதாய் அறிவித்திருக்கின்றனர்.

இரண்டாயிரம் ஆணடுகளுக்கு முன் சிந்தித்து செயல்படுத்திய ஒரு தொழில்நுட்பம் இன்றைக்குப் பொருந்துமா? என்று ஹைடெக் தமிழர்கள் கேட்பதும் புரிகிறது. முடியும் தமிழர்களே! இயற்கையை ஒட்டிய தொழில்நுட்பத்தை வடிவமைத்துப் பாருங்கள். பஞ்சபூதங்கள் பணிவாக உங்கள் முன் கைகட்டி நிற்கும். எப்படி சாத்தியம்? அன்றைக்கு, 2000 ஆண்டுகளுக்கு முன் கரிகாலன் என்ற சோழநாட்டு அரசன் வடிவமைத்திருக்கும் கல்லணையே அதற்குச் சாட்சி!

1830 ஆம் ஆண்டு சேர் ஆர்தர் காட்டன் (**sir arthur cotton**) என்ற பிரிட்டிஷ் பொறியியல் வல்லுநர் இந்தியாவில் நீர் அணைக்கட்டுகளை வடிவமைக்க இங்கிலாந்திலிருந்து சென்றார். கல்லணைக்குச் சென்றவர், அணையின் பக்கவாட்டுப் பகுதியில் தோண்டினார். மலைத்துப்போனார். அபபடி ஒரு தொழில்நுட்பத்தை அதற்கு முன் அவர் சிந்தித்ததும் இல்லை கேள்விப்பட்டதும் இல்லை. அந்தத் தொழில்நுட்பம் இதுதான்:

காவிரி ஓடும் பகுதியில், நீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்த காலத்தில் வரிசையாக, பெரிய பாறைக்கற்களைக் கொண்டு அடுக்கியிருக்கிறார்கள். தண்ணீரின் வேகத்தில் பாறைகளின் கீழ் உள்ள மணல் அரித்துக் கொண்டு ஓட ஓட அப்படியே அந்தப் பாறைகள் தரையில் அழுந்த ஆரம்பித்தன. பல அடிகள் கீழ் அழுந்தய பாறைகளின் மேல் ஒரு வகையான களிமண் கலவையை (மணல், கருபபட்டி, வெள்ளைச் சுண்ணாம்பு, பதநீர் கலந்த சக்திவாய்ந்த இயற்கையான சிமெண்ட் கலவை) பூசி, அதன் மீது மீண்டும் பாறைகளை அடுக்கியிருக்கிறார்கள். இவ்வாறு மீண்டும் பாறைகள், கலவை என ஒன்றன் மேலொன்றாக அடுக்கடுக்காக அமைக்கப்பட்டதால், தொடக்கத்தில் அடுக்கிவைத்த பாறைகளின் வரிசை, பூமியில் ஆற்றின் கீழே மணல் பகுதியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தாண்டி அடி ஆழத்தில் கடினமான தரையில் போய் அருமையாக உட்கார்ந்து கொண்டது. தயாராகிவிட்டது அணை.

1080 நீளத்தில், 50 அடி அகலத்தில், 18 அடி உயரத்தில் வலிமையாக நின்றுகொண்டிருநத அந்த இரண்டாயிரம் ஆண்டு கால அணை, சர் ஆர்தர் காட்டனின் உள்ளத்தில் பிரமிப்பினால் மேலும் மேலும் உயர்நது கொண்டே இருந்தது. தன்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் அச்சம்பவத்தினை 'எவ்வளவு ஆழம் என்று கண்டுபிடிக்கமுடியாத மணற்படுகையில் எப்படி அடித்தளம் (**foundation**) அமைப்பது என்ற தொழில்நுட்பத்தினை இந்த அணையைக் கட்டிய தமிழர்களிடமிருந்துதான் நாம் தெரிந்து கொண்டோம். இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித்தான் ஆற்றில் மீது பாலங்கள், அணைக்கட்டுகள் போன்ற நீரியல் தொழில்நுட்பக் கட்டுமானங்களை மேற்கொண்டோம். இம்மகத்தான சாதனையைப் புரிந்த முகம் தெரியாத மனிதர்களுக்கு நாம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்' என '**British Irrigation works in India**' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப்பட்ட புகழ்வாய்ந்த தமிழர்களின் கட்டடக்கலை, கல்லணையோடு நிற்கவில்லை. தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், மதுரை, இராமநாதபுரம், திருச்சி, திருநெல்வேலி நகரங்களில் இன்றும் நிமிர்ந்து நிற்கும் கோயில்களே இதற்குச் சாட்சி, ஒற்றைக் கல்லில் கோவிலின் மேல் கோபுரம் (தஞ்சை) அமைந்துள்ள கட்டடக்கலை இதறகு ஓர் அற்புத எடுத்துக்காட்டாகும். மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய இரண்டு பழநதமிழ் இலககிய நூல்களும் தமிழர்களின் கட்டடக்கலைத் தொழில்நுட்பத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.



காலத்தால் அழியாத தமிழர்களின் அன்றைய தொழில்நுடபத்தைப் பயன்படுத்தியே இலங்கையின் வடகிழக்கில் கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர் அமைக்கப்போவதாக புலிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவுப் பகுதியில் சுமார் 6 கிலோமீற்றர் தூரத்திற்கு வலுவான மண் சுவரைக் கட்ட விடுதலைபபுலிகள் முடிவு செய்துள்ளனர். கடலிலிருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ள நிலப் பகுதியில் இந்தத் தடுப்புச்சுவர் கட்டப்படுகிறது. 3 மீற்றர் உயரம், 2 மீற்றர் அகலத்தில் இந்த தடுப்புச்சுவர் அமையவுள்ளது.

பழங்காலத்து தமிழர் கட்டடக்கலையைப் பயன்படுத்தி இந்தத் தடுப்புச்சுவர் முற்றிலும் மண்ணால் கட்டப்படவுள்ளது.

மணல், கருப்பட்டி, வெள்ளைச் சுண்ணாம்பு, பதநீர் உள்ளிட்டவற்றைக் கலந்து அமைக்கப்படவுள்ள இச்சுவர் கான்கிரீட் சுவரை விட மிகவும் வலுவானதாகவும், உறுதியானதாகவும் அமையும். செலவும் மிக மிகக் குறைவாகவே இருக்கும் என தமிழர் மறுவாழ்வு அமைப்புத் தலைவர் சிவனடியார் அறிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி கட்டப்படவுள்ள அம் மண்சுவர், நமது மூதாதையர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாக அமையும் என அவர் கூறியுள்ளார்.

சுவர் கட்டுவது மட்டுமன்ற', அவற்றை ஒட்டி மாங்குரோவ் காடுகளை வளர்க்கவும், தென்னை மரங்களை நடவும் திட்டமிட்டுள்ளனர். சுனாமியை இவ்வாறு இயற்கையான முறையில் தடுக்கமுடியும் என்பதுதான் உண்மை.

இயற்கையை அதன் போக்கிலேயே சந்தித்த நாகரிகப் பினனணி கொணட நம் தமிழினம் இன்றைக்கு ஆயிரக்கணக்கில் அருமையான உயிர்களைப் பறிகொடுத்து நிற்கின்றது.

இயற்கையின் ஆன்மாவை அசைத்துப் பார்க்கும் முயற்சியில் ஈடுபடாமல், இயற்கையை சமாளிக்கும் வித்தையை நம் முன்னோர்கள் நமக்கு நிறையவே விட்டுச்சென்றுள்ளனர். அந்த காலடித் தடங்களைப் பின்பற்றினால், காற்றுக் கூட கைகளில் வந்து அடங்கும்.

*நன்றி: இணையத்தளம்.*

# இந்த வருட இறுதிக்குள் ஐ.தே.க ஆட்சி அமைக்கும்

## -ராஜித சேனாரத்ன எம்.பி

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் புதிய அரசாங்கம் ஒன்றினை தமது கட்சி அமைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

நடந்து முடிந்த மேதினம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாரிய வெற்றியினை அளித்திருக்கிறது. 1977 ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டார்.

இதனையடுத்து, முதன்முறையாக எதிர்க்கட்சி ஒன்று மேதின நிகழ்வொன்றின்போது அதிகூடிய மக்களை ஒன்றுதிரட்டிய வரலாறு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றிருக்கின்றது.

பொலிஸ் அறிக்கையின் படி கடந்த மேதின நிகழ்வின்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் 35 ஆயிரம் பேர் பங்குபற்றியிருந்தனர். ஜே.வி.பியின் கூட்டத்தில் 50ஆயிரம் பேர் வரை பங்குபற்றினர்.

ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியின் கூட்டத்தில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் முதல், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பங்குபற்றியமை தெரியவந்துள்ளது என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் கொழும்பில் சுமார் ஒரு இலட்சம் பேரைத் திரட்டி அரசாங்கத்தை பதவி விலக்கக்கோரும் செய்தியை அறிவிக்கப்போவதாக காமினி லொக்குகே தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 10ஆம் திகதி வெலிமடையிலும், 15ஆம் திகதி குருநாகலிலும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும், கூட்டங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி நடாத்தவிருக்கின்றது.

இதனைத் தொடர்ந்து, ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டோர், பொருளாதாரத்தில் பாதிப்புற்றோர் மற்றும் தொழிலாளர்களை இணைத்து தெய்வேந்திர முனையிலிருந்து கொழும்பு வரை பேரணியொன்றும் நடாத்தப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# குளங்கள் புனரமைப்பு

பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் இரண்டாவது கட்ட நடவடிக்கைகள் ஹறகட்ட கஷ்டஹிலியாவில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளன.

இந்த இரண்டாம் கட்ட நடவடிக்கைளின் கீழ் ஆயிரத்து 500 குளங்களைப் புனரமைப்பதற்கென எழுபது கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க-5)

# தொழிற்சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

தற்கால யுகத்திற்கு பொருந்தாத தொழிற் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தொழிலமைச்சர் அதாவுத செனவிரத்தின தெரிவித்திருக்கிறார்.

தற்போது அமுலிலுள்ள தொழிலாளர் சட்டம் 100 வருடத்திற்கு மேல் பழமை வாய்ந்தது.

ஆதலால் தற்போதைய தொழிலாளர் சட்டங்களை இரத்து செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொழிலாளர் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்கு 15பேரைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த தொழிலமைச்சர் தற்போது அமுலிலுள்ள தொழிலாளர் சட்டத்தினால் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்தாகவும் குறிப்பிட்டார்.

எனவே வருட இறுதிக்குள் தொழிலாளர் சட்டத்தில் பல மாற்றங்கள் கொண்டு வரவிருப்பதாக தொழிலமைச்சர் மேலும் தெரிவித்திருக்கிறார். (க-7-9)

# எந்தவொரு எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## மாவை சேனாதிராஜா எம்.பி



(கொழும்பு)

ஜே.வி.பி மற்றும்ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது ஜனாதிபதி உடனடியாக பொதுக் கட்டமைப்பினை உருவாக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படாது போனால் இலங்கையில் பாரிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்புக்கள் அரசசார்பற்ற அமைப்புக்களைக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

அதனைவிடுத்து இனவாதிகள் இன்று அரசசார்பற்ற நிறுவனங்களை விமர்சித்து வருகின்றன. இது கண்டிக்கத்தக்கது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# ஜே.வி.பியை வெளியேறுமாறு கிழக்கில் துண்டுப் பிரசுரம்

(கொழும்பு)

ஜே.வி.பியினர் கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியேற வேண்டுமெனக் கோரி துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சங்கிலியன் துருப்புக்கள் என்ற பெயரில் விநியோகிக்கப்பட்டிருக்கும் அந்த துண்டுப் பிரசுரத்தில், கிழக்கு மாகாணத்தில் ஜே.வி.பியினரின் ஆதிக்கம் அதிகரித்திருப்பதாகவும் எனவே அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் விநியோகிக்கப்படும் துண்டுப்பிரசுரம் குறித்து தம. ஏற்கனவே தெரியுமென ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்புக்கள் பெருமளவு அதிகரித்திருப்பதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் இவ்வாறான அமைப்புகளின் உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்களுடன் நடமாடுபவர்களை கைது செய்யும் நோக்கில் பொலிஸார் சிறிலங்காப் படையினரும் பல ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# வாகன விபத்தில் காயமடைவோருக்கு காப்புறுதி நிறுவனம், வாகன உரிமையாளர் சிகிச்சைக்கான பணத்தை வழங்க வேண்டும்

(கொழும்பு)

வீதி விபத்துக்களில் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோருக்காக செலவிடப்படும் தொகையை காப்பறுதி நிறுவனங்களிடமிருந்தோ, விபத்துக்குக் காரணமான வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்தோ அறவிடும் முறை அறிமுகப்படுத்தப்பட வேணடுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

விபத்துக்களில் காயமடைவோருக்கு அவசர சிகிச்சைகளை அளிப்பதற்காக பெருமளவு தொகையை செலவடப்படவேண்டியுளளது. கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் அனில் யாசிங்க தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளில் கவனயீனம் காரணமாக இடம்பெறும் விபத்துக்களில் காயமடைவோருக்காக காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும், வாகன உரிமையாளர்களிடமிருந்தும் மருத்துவ செலவிற்கான பணம் அறவிடப்படுகின்றது.

இந்த முறையை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதே சிறந்தது. காயமடைந்தவர்களைத் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கும் பட்சத்தில் பெருந்தொகையான பணம் செலவாகும். இலவச சுகாதார சேவைகளை வழங்குவதற்குப் பொதுமக்களின் பணமே செலவாகின்றதென டாக்டர் அனில் யாசிங்க மேலும் சுட்டிக்காட்டினார். (ற-5)

# வட – கிழக்குப் பாடசாலைகள் 5 பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன

(திருகோணமலை)

பாடசாலைகளை வகைப்படுத்தும் மத்திய கல்வியமைச்சின் திட்டத்தின் கீழ் வடக்கு -கிழக்கு மாகாண பாடசாலைகளும் 5 வகையாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மாகாணத்தில் இயங்கும் 1997 பாடசாலைகளில் அதிகஷ்டப்பாடசாலைகளென 758உம், கஷ்டப்பட பாடசாலைகளென 281உம் வசதி குறைந்த பாடசாலைகளென 260உம் வசதியான பாடசாலைகளென 379உம் மிக வசதியான பாடசாலைகளென 319உம் வகைப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அட்டவணைக்கு அமைய கஷ்ட அதிகஷ்டப்பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2ஆயிரத்து 500ரூபா, 1,500ரூபா விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# ரூ.55 இலட்சம் பெறுமதியான கொள்ளையிடப்பட்ட பொருட்கள் பொலிஸாரால் மீட்பு



கொம்மனித்தெரு பொலிஸ் நிலையத்தின் விசேட பொலிஸ் பிரிவினர் ரூபா.55 இலட்சம் பெறுமதியான கொள்ளையிடப்பட்ட தங்க ஆபரணங்கள், செலுலர் போன், வீட்டு உபகரணங்கள், பணம் என்பவற்றை மீட்டுள்ளனர்.

இவை கொழும்பின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கொள்ளையிடப்பட்டவையாகும.

இக்கொள்ளையடிக்கபபட்ட பொருட்கள் ஹோமாகமை, நுகேகொடை, மிரிஹான, கம்பஹ, மொறட்டுவை போன்ற பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 14 பேரை ஆயுதங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 4 தினங்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 14பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

இக்கொள்ளைச் சம்பவத்துக்கு 4 மோட்டார் சைக்கிள், 2 ஆட்டோக்கள், 2 லொறிகள என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ற-2)

# ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நிர்வாகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நிர்வாகம் ஊழல் நிறைந்தது எனவும் செயற்திறன் அற்றது எனவும் குறிப்பிட்டு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளினால் ஊழியர் நம்பிக்கை நிதியம் வலுவிழந்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

நாஏஹறண்கிட்டியவிலுள்ள தொழிலாளர் தொழற்சங்கத்துக்கு முன்னால் நடாத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை ஊழியர் நம்பிக்கை நிதியப்பொதுச்சங்கம் எற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் 11 கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ற-8)

# நீதிவான் நீதிமன்றங்களின் அதிகாரத்தை அதிகரிக்க பரிந்துரை

(கொழும்பு)

குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது தொடர்பாக நீதிவான் நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரங்களை அதிகரிக்க வேண்டுமென்று பொலிஸிற் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா தலைமையிலான குழு பரிந்துரைத்திருக்கின்றது.

மஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் ஒரு சில குற்றச்சாட்டுக்களுக்காகவே தண்டனை வழங்கப்படுகின்றன. இந்த அதிகாரங்களை அதிகரித்து நீதிவான், நீதிமன்றங்கள் ஐந்தாண்டு வரையான சிறைத்தண்டனையை வழங்குமாறும் ஒரு இலட்சம் வரையிலான அபராதங்களை விதிக்குமாறும் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும என்று யோசனை கூறப்பட்டிருக்கின்றது. (ற-5)

## பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தை

# தனியார் மயப்படுத்துவதில்லையென 31ற்குள் அரசு அறிவிக்க வேண்டும்

## தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியாா மயப்படுத்துவதில்லையென எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் அரசாங்கம் உறுதிமொழி வழங்கவேண்டுமென பெற்றொலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த அரசாங்கம் இன்னமும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக இலங்கை பெற்றொலிய கூட்டுத்தாபன தேசிய ஊழியர் சங்கம், தொழிற் சங்கங்களின் சார்பில் தெரிவித்துள்ளது.

அத்துடன் தமது ஊழியர்கள் தொடர்பாக அண்மையில் நிதியமைச்சின் தெரிவித்த கருத்துக்களுக்காக பகிரங்கமாக அவர் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று முன்தினம் பல்வேறு இடங்கஸில் எதிர்ப்பு நடவடிக்கைளில் ஈடுபட்டனர். (ற-8)

# அசமந்தம்; விபத்து; காயம்

(காலி)

காலி கராப்பிட்டிய மருத்துவ மனையிலிருந்து மகமோதரை மகப்பேற்று மருத்துவமனைக்கு அம்பியூலன்ஸ் வண்டியில் அழைத்துச் செல்லப்பட்ட தாயும் 10 நாள் வயதுடைய சிசுவும் வண்டியின் பின் கதவு திறந்துகொண்டதால் கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த தாய் மகமோதரை மகப்பேற்று மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதோடு சிசுவுக்குப் பாதிப்பு எதுவும் இல்லை என ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற-2)

# சாரதிக்கு 8 வரை விளக்கமறியல்

(கொழும்பு)

குருநகல் -கொழும்பு வீதியில் பொத்துகள ரயில் கடவையில் பாதுகாப்பற்ற முறையில் வாகனத்தை செலுத்தியதாக கைது செய்யப்பட்ட சாரதியை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநகர் பிரதான மகிஸ்திரேட் உத்திரவிட்டுள்ளார்.

ரயில் கடவையில் பாதுகாப்பற்ற முறையில் வாகனத்தை செலுத்தியதாக பயணிகளிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டையடுத்தே சாரதி பொலிஸாரினால் கைது செயயப்பட்டுள்ளார்

இந்த பஸ் வண்டி கொழும்பிலிருந்து பொலநறுவை நோக்கி பயணம் செய்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

# சடலம் மீட்பு

(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து 38 வயதான நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஆதம் லெப்பை முகமட் சமில் என்று இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் ஒருவர் சரணடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது. விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (ற-7)


# ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நாவலர் மணி மண்டபத்தில் நடாத்திவரும் ஆன்மீக நிகழ்வில இன்று பி.ப6.00மணிக்கு ‘கந்தரலங்காரம்’ எனும் விடயம் தொடர்பில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசன சிறப்புச் செற்பொழிவாற்றவுள்ளார். (ற-19)

# வேலை நிறுத்தம்

## சிறுகதை



கண்ணாடி முன்நின்று உச்சி வகிடெடுத்து தலை வாரும் போதெல்லாம் வெள்ளிக் கம்பியென இளையோடியிருக்கும் வெள்ளை முடிகள் அபயாவின் மனதை நெருடும். 35வயதைத் தாண்டிக் கொண்டிருப்பதை அவ்வ அவளுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தும்.

"தம்பி சுரேன், இந்த வரனையாவது எப்படியும் முடிக்க வேணும். இடம் நல்லதாகத்தான் இருக்கு. எங்களுக்கும் ஒத்துவரும் போல கிடக்கு. எதுக்கும் வடிவா ஒருக்கா விசாரிச்சிட்டுத்தான் எதையும் செய்யவேணும்..." என தாய் புவனேஸ்வரி மகனிடம் கூறிக்கொண்டிருப்பது உள்ளறையில் இருந்த அபயாவின் காதுகளில் தெளிவாக விழுந்தது.

முப்பத்துமூன்று வயதில் மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி முப்பத்து நாலாவது வயதில் கணவனை இழந்து பெரும் இடர்பாடுகளின் மத்தியிலும் தன் மூன்று பிள்ளைகளையும் கௌரமாக வளர்த்தெடுத்தும் ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்க பெரும் பாடுபட வேண்டியிருந்தது.

இரண்டு பெண்களுக்கு ஒரே ஒரு செல்ல மகன் சுரேன். அபயாவிற்கு அடுத்து நிற்பவள் அபிநயா. அவளுக்கு முப்பத்து இரண்டு வயது. சுரேன் இப்பொழுது தனியார் நிறுவனமொன்றில் வேலை பார்க்கிறான். நல்ல திறமையிருந்தும் படிக்கும் ஆர்வம் இருந்தும் மேலே படிக்க குடும்ப சூழல் இடம் கொடுக்காததால் A/L வரை படித்துவிட்டு வேலைக்குப்போக ஆரம்பித்தான்.

சிறுவயதில் கணவனை இழந்து இச் சமூகத்தில் பெரும சவாலுக்கு முகம் கொடுத்து மூன்று பிள்ளைகூளையும் மதிப்போடும் மரியாதையோடும் வளர்தெடுத்த தாயின் மீது சுரேனுக்கு அளவு கடந்த பாசமும் மரியாதையும் உண்டு.

இப்பொழுது அபயாவை பெண் பார்த்துவிட்டுப் போயிருந்தார்கள். அபயாவை எல்லா விதத்திலும் அவர்களுக்குப் பிடித்திருந்தது. ஆனால் சீதனம் தான் அவர்கள் எதிர்பார்ப்பாய் இருந்தது. அதை ஈடுசெய்யத்தான் பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

இந்த சீதனம் என்ற கோட்பாட்டுக்குள் எத்தனை மனிதங்கள் மாண்டு கொண்டிருக்கின்றன. பணம், பொருள் இவை தானே ஒவ்வொருவர் வாழ்வையும் உயர்த்தவும் ஊனப்படுத்தவும் செய்கிறது. யார் தலையில் இடி விழுந்தாலும் பரவாயில்லை. மாப்பிள்ளை வைத்திருப்போர் பேரம் பேசி தம் கஜானாவை நிறைத்துக் கொள்கிறார்கள். இந்த அவலம் ஏன் எம்மினத்திடம் மட்டுமே குடிகொண்டுள்ளது...?

சுரேனின் சொற்ப வருமானத்தில் அவர்களது குடும்ப சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. அவர்களது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதே பெரிய காரியம் இதில் மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் சீர் வரிசையைக் கொடுக்க எங்கே போவது? சுரேனின் வருமானத்தில் குருவி சேர்ப்பது போல கொஞ்சம் வாங்கிக் கணக்கில் சேமிப்பு வைத்திருந்தார் புவனேஸ்வரி. இரண்டு பெண்களை பெற்றவராச்சே.

சுரேன் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். அவனது உள்ளம் பலவாறான சிந்தனைகளை அசைபோட்டது. 'யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் வறுமை என்பதை உணரமுடியவில்லை. முக்கால்வாசிப்பேரும் செல்வச் செழிப்பிலேயே வாழ்கிறார்கள். பாதிப்பேர் சுயமாக உழைத்த பணத்தில்... மீதிப்பேர் தம்மை விலைபேசிய பணத்தில்....

பணம் மட்டுமே இங்கு முக்கியம். அது இல்லையென்றால் மரியாதையென்பது கொஞ்சமும் கிடையாது' என சுரேனின் மனம் பரிதவித்தது.

"தம்பி சுரேன், நீ நாளைக்கு எப்படியாவது இந்தப் பணதத்துக்கு ஏற்பாடு செய்ய வேணும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துவிடலாம். எதுக்கும் மாமா வீட்டையும் போய் வா" என தாய் கூறிய வார்த்தைகள் சுரேனின் இதயத்தைத் தொட்டது.

'சீ... கௌரவமாக உழைத்தும் பிறரிடம் கையேந்த வேண்டியுள்ளதே என்ன உலகமடா இது' என அலுத்துக்கொண்டான். சோர்வுடன் போய் படுக்கையில் விழுந்தான்.

பொழுது விடிந்தது. காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மாமன் வீட்டுக்குப் போக ஆயத்தமானான். தாய் கொடுத்த தேனீரை வாங்கிக் குடித்துவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கினான். அவனது உள்ளம் அவமானத்தால் குன்றிப் போய்விட்டது. ஏதேதோ சிந்தனைகள் இவன் மனதை குடைந்தது.

தெருவில் சனநடமாட்டம் அதிகமாகவே இருந்தது. ஒவ்வொரு மனிதரும் ஏதோவொரு தேவைக்காகப் பறக்கிறார்கள்.

திடீரென ஒரு குச்சொழுங்கை ஒன்றில் இருந்து வேகமாய் மெயின் றோட்டில் ஏறிய கை.ஏஸ வான் ஓரமாய் வந்துகொண்டிருந்த சுரேனை மோதித் தள்ளியது.

கொழும்பிலிருந்து வந்த வான். அதிகாலையிலேயே கோர விபத்து. சுரேன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். அருகில் நின்றவர்கள் அவசர அவசரமாய் ஆட்டோவில் அள்ளிப் போட்டுக்கொண்டு மருத்துவமனைக்கு ஓடினார்கள். மருத்துவமனை வெறிச்சோடிக் கிடந்தது. அதன முன் பகுதியில் இரு சிற்றூழியர்கள் மட்டுமே இருந்தார்கள். உள்ளே வைத்தியர்கள் யாரும் இல்லை. அவர்கள் சொன்ன பதில் பேரிடியாய் இருந்தது.

"இன்று ஸ்ரைக். அதனால யாரையும் டொக்டர்மார் பார்க்க மாட்டினம். வேறை எங்காவது கொண்டு போங்கோ"

அவன் உயிரைக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லை.

சம்பளப் பிரச்சினையாம். சம்பளம் உயர்த்த வேணுமென்று வேலை நிறுத்தத்தில் குதித்திருந்தது மருத்துவ சமூகம். சுரேனின் உடலில் இருந்து குருதி ஓடிக்கொண்டிருந்தது. அதனுடன் ஒவ்வொரு துளியாய் அவனது உயிரும் வடிந்துகொண்டிருந்தது. சுரேனின் உயிர் அவனது உடலை விட்டுப் பிரிந்து விட்டது.

ஏழைகள் வாழ்வில் எப்போதும் சோதனையும் வேதனைகளும்தான். மனிதர்களை மனிதர்களாக மனிதர்கள் மதிக்காத வரையிலும் இன்னும் எத்தனை உயிர்கள் பலியாகப் போகின்றனவோ. பணம் - அது தான் இன்றைய உலகின் சக்கரம். அது அல்லாத மனிதன் இங்கு மனிதனல்ல. அவனை நமபியிருந்த மூன்று ஜீவன்களன் வாழ்வும் இனி கேள்விக் குறி தானே?

**M. சந்திரகலா,**
யோகபுரம்.

# தடுப்புக் கால எல்லை நீடிப்பு மனித உரிமைகளை பாதிக்கும்

## ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை



(கொழும்பு)

விசாரணைக்கென சந்தேகநபரை தடுத்து வைக்கும் கால எல்லையை 24 மணித்தியாலங்களில் இருந்து 48 மணித்தியாலங்களாக அதிகரிப்பதானது அடிப்படை மனித உரிமைகளை ஆபத்தான கட்டத்திற்கு இட்டுச்செல்லும் என்று ஐ.தே.க எம்.பி ஜி.எல்.பீரிஸ் கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் எச்சரிக்கை விடுத்தார்.

குற்றவியல் நடவடிக்கை முறைச சட்டக்கோவையில் செய்யப்படும் இம்மாற்றம் குறித்து பரிசீலனை செய்து ஏகோபித்த கருத்தைப் பெற பாராளுமன்ற நிலையியல் குழுவை நாடவேண்டும்.

அதன் பின்னரேயே இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்த ஜி.எல்.பீரிஸ தடுப்புக் காலத்தை 24 மணித்தியாலங்களுக்கு மேலாக அதிகரிப்பதை தாம் வன்மையாக எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசாரணைக்கான தடுப்புக் காலத்தை 48 மணித்தியாலங்களாக அதிகரிப்பதில் எமக்கு சந்தேகம் எழுகின்றது.

24 மணித்தியாலங்களுக்குள் விசாரணை முடியாவிட்டால் அது பெரும் அநீதியாகும்.

இச்சட்டமூலத்தில் நான் பல குறைபாடுகளை அவதானிக்கிறேன். இதனாலேயே பாராளுமன்ற நிலையியற் குழுவுக்கு இச்சட்ட மூலத்தை ஆற்றுப்படுத்தி கடினமான விடயங்களைப் பற்றி ஆராய வேண்டும் எனக் கேட்கிறேன்.

இந்தச் சட்டம் 2வருட காலப பகுதிக்கு மட்டுமே அமுலில் இருக்கும் என்று கூறப்படுவது வழமைக்கு மாறானது.

ஏன் இந்த நடைமுறை? இச்சட்டத்தின் மீது அமைச்சருக்கு நம்பிக்கை இல்லையா? சந்தேகத்துடன் சட்டத்தை முன்னெடுப்பது பெரும் தவறாகும்.

தடுப்புக் காலத்தை அதிகரிப்பதன் மூலம் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியுமா? எம்மால் இதனைப் பரீட்சித்துப் பார்க்க இயலுமா?

இச்சட்டம் பெரும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அனைவருக்கும் சமனான சட்டத்தில் கறைபடியும் வாய்ப்பை ஏற்படுத்தும். புனிதமான குற்றவியல் சட்டத்திற்குப் பாதிப்பு ஏற்படும்.

பொலிஸ் விசாரணையின் போது குறைந்த காலத்தை எடுத்துக் கொள்வதே சிறந்தது.

தடுப்புக் காலத்தை அதிகரிப்பதனால் சட்டத்தரணியின் உதவியைப் பெறுவதும் தாமதமாகலாம்.

இந்தச் சட்டமூலம் அடிப்படை மனித உரிமைகளுடன் தொடர்புபட்டுள்ளதால் எந்தவிதமான சமரசத்திற்கும் இடமளிக்க முடியாது.

இதேவேளை குறித்த சில வழககுகளில் சுருக்க முறையற்ற விசாரணைகளை நடத்துவதைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் மிகவும் சர்ச்சையான விடயமாகும்.

சுருக்க முறையற்ற விசாரணையை சில வழக்குகளில் தவிர்ப்பதன் மூலம் எந்த வகையான நன்மை கிட்டும் என்று அமைச்சர் எதிர்பார்க்கிறார் எனத் தெரியவில்லை என்றார். (க)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அநுராதபுரம் பண்டார புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவத்தில் மேலும் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரின் நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (க-7)

# கொமிசியக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் எதிர்வரும் 8ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்மறைக்கல்வி நடுநிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் தலைவி சகோதரி வைலற் இம்மானுவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

# திருமுருக கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 51

### சரவணப்பொய்கை

கோலாலம்பூர் போயிருந்தபொழுது ஸ்காட்ரோடு கந்தசாமி கோவிலுக்குச் சென்று தரிசித்தேன். கோவிலுக்குப் பின்புறம் ஒரு நந்தவனம். அதில் ஒரு சிறு தண்ணீர்த் தடகம். அதில் தாமரைப் பூவில் முருகப் பெருமான் எழுந்தருளியிருப்பது போன்ற சுதைத் திருவுருவம் அமைத்திருந்தது.



இதனைக்கண்ட எனக்கு இதுபோல் நமது காங்கேய நல்லூரில் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகியது. காங் கேய நல்லூர் கோவிலுக்கு முன் யாவையும் வீடுகளாகவே இருந்தன.

அந்த வீட்டை உடையவர்களை அணுகி அவைகளை விலைக்குத் தருமாறு கேட்டேன். அவர்கள் சரவணப்பொய்கைத் திருப்பணிக்குத்தானே கேட்கிறார் என்ற எண்ணம் இன்றி இருமடங்கு, மும்மடங்கு, விலை கூறினார்கள். நான் எப்படியும் அப்பணி செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தால் அவர்கள் கேட்ட விலையைக் கொடுத்து அத்தனை வீடுகளையும் விலைக்கு வாங்கி, இடித்து ஒரு சதுரமாக ஒழுங்கு செய்தேன். உயர்ந்த சிற்பியைக் கொண்டு செயற்கையாக சரவணப்பொய்கையும், அதன் இடையிலே தாமரைப் பூவில் சண்முகப்பெருமான் எழுந்தருளியிருப்பது போன்ற சுதைச்சிலையும், சுதைச்சுற்றி ஆறு கார்த்திகைப் பெண்கள் கையேந்தி நிற்பது போன்ற சுதைச் சிலைகளையும், தங்கரத்போன்ற ஒரு சிகரமும் திருப்பணி செய்தேன்.

இதன் தென்புறத்தில் அடியார்கள் வந்தால் இலவசமாகத் தங்குவதற்கு எல்லா வசதிகளுடன் கூடிய (கெஸ்ட் ஹவுஸ்) விருந்தினர் இல்லம் அமைத்தேன். இவைகளுக்கு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் ஆயிற்று.

### லட்சதீபம்

ஆண்டுதோறும் மாசி மாதம் விசாகத்தன்று முருகப்பெருமானுக்கு லட்சதீப விழா எனது உபயமாக நடைபெறும். சிறந்தவிழா பெரிய மேளம், உயர்ந்த இன்னிசையரங்கு, வான வேடிக்கை இவைகளுடன் கண் கொள்ளாத காசியாக விளங்கும். திருச்சொந்தூரில் கூட இதுபோன்ற அலங்காரத்தைக் காணமுடியாது. இந்த விழா நாள் செய்வதனால் எல்லோரும் குறைந்த ஊதியம் பெறுவார்கள். ஏகதேசம் 6000, அல்லது 7000 ரூபாய் இவ்விழாவிற்குச் செலவாகும். இப்போது 10000 ஆகிறது. இவ்விழா எப்பொழுதும் நடைபெற நிரந்தர நிதி அமைத்திருக்கின்றேன்.

இந்த விழாவில் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்கள், A.K.C.நடராஜன் அவர்கள், சின்ன மௌலானா அவர்கள், சேதுராமன் பொன்னுசாமி அவர்கள், திருவெண்காடு சுப்பிரமண்யம் அவர்கள், திருச்சேறை T.V.S. சிவசுப்பிரமணியம் அவர்கள், திருவெல்லா Rஜயசங்கர், B.Aஅவர்கள், (தவில் சக்கரவர்த்தி வளையப்பட்டி A.R.சுப்பிரமணியம் அவர்களுடன்) முதலிய நாதஸ்வர வித்வான் களும், மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன்?, மணி கிருஷ்ணசாமி M.L வசந்தகுமாரி, ஸ்ரீரங்கம் கிருஷ்ணமூர்த்தி ராவ், மலேசியர் வாசுதேவன், T.K.S.கலைவாணன் T.A.S.தக்கேசி முதலிய இசைவாணர்களும் தருமபுரம் சுவாமிநாதன், லால்குடி சுவாமிநாதன், கோடம் பாக்கம் ஆறுமுக ஓதுவார், விசுவலிங்கம் சபாபதி முதலிய திருமுறை மணிகளும் கலந்து இவ்விழாவினைச் சிறப்பித்திருக்கிறார்கள்.

இவ்விழாவிணை ஒருமுறை தரிசித்தவர்கள் ஆயுள் உள்ள நாள்வரை மறக்கமாட்டார்கள்.

காங்கேயநல்லூர் அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருக்கின்ற சுந்தரராஜப் பெருமாள் கோவிலுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் இராஜகோபுரத் திருப்பணி செய்தேன்.

### 1969-வயலூரில் 2வது முறை திருப்பணி

வயலூரில் மீண்டும் திருப்பணி செய்ய வேண்டுமென்று அன்பர்கள் விரும்பியபடி அத்திருப்பணியைத் தொடங்கினேன். திருச்சிராப்பள்ளியில் 19 நாள் விரிவுரை வைத்து அலைந்து திரிந்து வசூல் செய்தேன். அதில் ஒரு இலட்சம் ரூபாய் கிடைத்தது.

என் தமையனார் சந்நியாசம் பெற்றுக்கொண்ட மறைஞானசிவம் அவர்கள் வயலூரிலேயே தங்கி இத் திருப்பணியைச் செய்து முடித்தார்.

கோயிலுக்கு முன் கல்யாண மண்டபம், அன்பர்கள் விடுதி, கோயிலுக்கு முன்னே ஒரு சிறிய கோபுரம் இவைகள் செய்து மகாகும்பாபிஷேகம் மிகப்பெரிய அளவில் 19.06.1969இல் சிறப்பாக நடைபெற்றது. இதற்குச் சுமார் 4 இலட்சம்ரூபாய் ஆயிற்று.

### திருப்பணிகள்

முருகன் திருவருள் என்னைக் கருவியாகக்கொண்டு நடத்திக்கொண்ட திருப்பணிகள் பல. அவற்றுள் நினைவில் உள்ள சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன்.

1) காங்கேயநல்லூர் முருகன் கோயில் திருப்பணி
2) சென்னை குயப்பேட்டை இராஜகோபுரத் திருப்பணி மேற்படி திருக்குளத் திருப்பணி
3) மோகனூர் அருணகிரிநாதர் அறச்சாலை
4) காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் திருமதில் திருப்பணி
5) வடலூர் சத்தியஞானசபைத் திருப்பணி
6) திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் திருப்பணி
7) சமயபுரம் திருப்பணி
8) கோவை தடாகம்ரோடு பால தண்டாயுதபாணி கோயில் திருப்பணி
9) கோவை வெங்கடேசுவரர் கோயில் திருப்பணி
10) கோவை சேஷாத்ரிசுவாமிகள் அதிஷ்டானம்
11) கோவை ஐயப்பசுவாமி திருப்பணி
12) கோவை காமகோடி வித்யா மந்திர்
13) திருவானைக்கா திருப்பணி
14) மதுரை ஐயப்பசுவாமி திருப்பணி
15) மதுரை கூடலழகர் திருப்பணி
16) திருமோகூர் காளமேகஸ்வாமி திருப்பணி
17) சென்னை தேனாம்பேட்டை முருகன் கோயில் திருப்பணி
18) சென்னை மாதவப்பெருமாள் கோயில் திருப்பணி
19) வள்ளிமலை திருப்பணி (இராஜகோபுரமத்)
20) வள்ளிமலை சரவணப் பொய்கை திருப்பணி
21) ஸ்ரீரங்கம் திருப்பணி
22) திருப்பராய்த்துறை ராமகிருஷ்ணகுடில்
23) நெல்லிக்கும்பம் வீரபத்திர சுப்ரமண்ய சுவாமி கோவில்
24) வயலூர் திருப்பணி (2 முறை)
25) கும்பகோணம், கொட்டையூர் கோடீச்சுவர நாதர் கோயில் திருப்பணி
26) காங்கேய நல்லூர் பெருமாள் கோயில் இராஜகோபுரத் திருப்பணி
27) சென்னை சைதை குளத்திருப்பணி

(தொடரும்)

## அதிபர், முதன்மை ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(அம்பன்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு அதிபர் மற்றும் முதன்மை ஆசிரியர், வெற்றிடங்களுக்குப் பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் விண்ணப்பங்களை வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டிய இறுதித் தினம் இன்றாகும்.

சிதம்பரக் கல்லூரிக்கான அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1 கொண்ட பட்டதாரி அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 கொண்ட பட்டதாரி விண்ணப்பிக்கலாம்.

கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலைக்கான அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை 2 111, அல்லது 111 அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2-1 அல்லது 2 11ஆகிய தகைமைகள் உடையோர் விண்ணப்பிக்கலாம்.

விஞ்ஞானம், வர்த்தகம், சைவ சமயம், வழிகாட்டல் ஆலோசனை, விசேட கல்வி போன்ற வற்றிற்கான முதன்மை ஆசிரியர் பதவிக்கு விஞ்ஞானம், வர்த்தகம், சைவ சமயம ஆகிய பாடங்களில் பட்டம் பெற்றவர் அல்லது பயிற்றப்பட்டவராக இருப்பதுடன் இலங்கை ஆசிரியர் சேவை 2-1 அல்லது வகுப்பு 1ஐச் சேர்ந்தவர் விண்ணப்பிக்கலாம்.

வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு இவ்விடயத்தில் குறைந்தது 04 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி பெற்ற ஆசிரியர் சேவை வகுப்பு 1 அல்லது 2-1ஐக் கொண்டிருப்போர் விண்ணப்பிக்கலாம்.

விசேட கல்விக்கு விசேட கல்வி தொடர்பான பயிற்சியைப் பெற்றவராக இருந்தல் வேண்டும். (ந-56,2)

## அடையாளம் காணப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதி கோரகல்லிமடுவில் கடந்த செவ்வாய்க்கிழமை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

செவ்வாயன்று மாலை மட்டக்களப்பு பதில் நீதிபதி கே.தங்க வடிவேல் மட்டக்களப்பு மருததுவ மனை பிரேத அறையில் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

கழுத்திலும் வயிற்றிலும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

மரண விசாரணை மேற்கொண்ட பதில் நீதிபதி பிரேத பரிசோதனையின் பின்பு சடலத்தை எவரும் உரிமை கோர முன்வராத பட்சத்தில் அரச செலவில் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-3)

## போதைப்பொருள் பாவனையை ஒழிக்க இலங்கைக்கு அமெ. 175000 டொலர் உதவி

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளிலுள்ள இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையை ஒழிக்க அமெரிக்கா நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அமெரிக்க 1 இலட்சத்து 75ஆயிரம் டொலர்களை வழங்கியுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதுவராலயத்தின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி இதற்கான காசோலையை இத் திட்டததின் கொழும்புச் செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளார்.

இந்த நிதி கலாசார நிகழ்ச்சிகள் ஊடாக அறிவுரைகள் வழங்கவும், புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ந-8)

## பாம்புடன் இளைஞர் வசமாக மாட்டினார்

கொடிய பாம்பைக் கொண்டு இளம் யுவதிகளை அச்சுறுத்திய இளைஞர் ஒருவர் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்.

இச் சம்பவம் கோட்டைப் பொலிஸ் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

கோட்டை பிரிஸ்டல் வீதிக்கு அருகாமையில் சென்று கொண்டிருந்த இரு இளம் யுவதிகளை கையில் விஷப்பாம்புடன் வந்த மேற்படி வாலிபர் பின்தொடந்தாராம்.

பாம்பைக்கண்டு பயந்துபோன இந்த இளம் யுவதிகள் அங்கு நின்றுகொண்டிருந்த பொதுமக்களிடம் இந்த வாலிபரின் செயலைக் கூறி கதறியழ ஆரம்பித்தனர்.

தமது உறவினர் ஒருவரின் வருகைககாக மேற்படி இடத்திற்கு தாங்கள் வந்ததாக யுவதிகள் கூறினர். அந்த வேளையிலேயே இந்த வாலிபர் பாம்புடன் இவர்களைப் பின்தொடர்ந்துள்ளார்.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவருவதற்காகவே தாம் இவ்வாறு பாம்புடன் இந்தப் பகுதிக்கு வந்ததாகவும் அந்த வாலிபர் அங்கிருந்த பொதுமக்களிடம் கூறியுள்ளார்.

டிப்டொப்பாக காட்சியளித்த இந்த வாலிபரை இப்பகுதியில் கடமையிலிருந்த போக்கு வரத்து பொலிஸ் பிரிவு கான்ஸ் டபிள் விசாரணைக்கென அழைத்துச் சென்றார். (ந-2)

## விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப்பிரிவு பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி- 2005இன்று பி.ப.2.30மணிக்கும் நாளை காலை 7.00 மணிக்கும் யா/புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீ மோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கேகணேஸ் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் இ.றொகான் இராஜசிங்கம் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் என்.கண்ணன ஆகியோா சிறப்பு விருந்தினராகவும் ஊர்காவற்றுறை புதிய அந்தோனியார் கல்லூரி அதிபர் வண.பிதா ஜேசுதாசன், ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் என்.ஈழமாறன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும கலந்துகொள்ளவுள்ளனர். (ந-2)

## முஸ்லிம் வீதியில் சுகாதாரக்கேடு

தமிழ் முஸ்லிம் மக்கள் சேர்ந்து வாழும் முஸ்லிம் வீதியில் யாழ். மாநகரசபை ஊழியர்கள் வேறு இடங்களிலிருந்து கொண்டுவரும் குப்பைகளைக் கொட்டுவதால் மக்கள் வசிக்கமுடியாத அளவுக்கு சுகாதாரக்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் இக் குப்பைகளை உடனடியாக அகற்ற மாநகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அப்பகுதி வாழ்மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (து)

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் - குறள்

வலம்புரி

# சர்ச்சையைக் கிளப்பிய தேரரின் பேச்சு

இலங்கைப் பாராளுமன்றத்திற்குள் மக்கள் பிரதிநிதிகள் என்ற போர்வையில் அராஜகத் தாதாக்கள் ஆட்டம்போடுகின்றனர். ஜனநாயகம் சங்கமிக்க வேண்டிய பீடத்தில் சர்வாதிகாரத்தொனி எழுந்துநிற்கிறது. அச்சுறுத்தி அடக்கிக் காரியம் பண்ணும் வகையில் இத்தகையோரின் அதட்டல்கள் அமைந்திருக்கின்றன.

பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடியபோது ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் உரையாற்றினார். அவரது உரை சபையில் சர்ச்சையைக் கிளப்பியது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் மற்றும் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேரரைக் கடுமையாகச் சாடினர்.

இதற்குத் தேரர் சபையில் அளித்த தொடர் உரை அவரது வாழ்க்கைக்கும்; ஆடைக்கும் பொருத்தமில்லாத வகையில் அமைந்திருந்ததுடன், இனவாத ஆணவம் அராஜக அழிவு ஆட்டம் என்பவை அவ்வுரையில் கொப்பளிக்கும் வகையில் அமைந்திருந்தது. தேரர் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை விழித்து, "இது தமிழீழம் அல்ல. நீங்கள் தற்போது கொழும்பில் இருக்கின்றீர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று கர்ச்சித்தார்.

தேரரின் உரையின் உள்ளர்த்தம் இலங்கைத் தேசம் தமது என்பதையும், தமது இடத்திலிருந்து கொண்டு வாய்திறந்தால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்பதையும் அவர் மறைமுகமாக தமிழ் எம்.பிகளுக்குச் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்திருந்தது.

பற்றற்ற வாழ்க்கையென்று துறவுபூண்டுவிட்டு பின்னர் அரசியல் கதிரைக்கு ஆசைப்பட்டு அதில் ஏறி உட்கார்ந்துகொண்டு அன்பைப் போதிக்கும் பௌத்த தர்மத்தை ஓதிக்கொண்டு கொலைவெறி இனவாத வார்த்தைகளை பிரயோகித்து அச்சுறுத்துவதை என்னவென்று குறிப்பிடுவது.

ஜனநாயக மேடையிலேயே இனவாதத்தையும், அழிவுப்படலத்தையும் அரங்கேற்றுபவர்கள் எப்படி இனரீதியான ஐக்கியத்துக்கும், புரிந்துணர்வுக்கும் வழிகோலுவார்கள். இது என்னுடைய இடம். அது உன்னுடைய இடம் என்று பிரித்துக்காட்டிப் பேசுபவர்கள் எப்படி ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைவரையும் ஒற்றுமையாக வாழவிடுவார்கள்.

இனவாதமும், மதவாதமும், மொழிவாதமும் இலங்கைத் தேசத்தில் பாதீனியம்போல் உட்கார்ந்து இருக்கிறது. இந்த நச்சுக்கொடியை அகற்றுவதென்பது இலகுவில் கைகூடும் காரியமல்ல. நாட்டின் அழிவுக்கும், அதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கும் இதுதான் அடிப்படைக் காரணம்.

தமிழ்மக்களை இலங்கையின் பிரஜையாகவே நினைக்க மறுதலித்து நிற்கிறது சிங்கள பௌத்த மேலாண்மை வாதம். இதுதான் உண்மையும் - யதார்த்தமும். இனப்பிரச்சினைக்கு எத்தகைய சமரசத் தீர்வை எவர் கொண்டுவந்தாலும் அவையெல்லாம் இனவாதத் தீயினால் பொசுங்கிப் போகும் என்பதுதான் உண்மை.

இந்த நிலையில் அத்துரலிய ரத்னதேரர் பிரித்துக் காட்டியதுபோல என்னுடைய இடம் கொழும்பு, உன்னுடைய இடம் தமிழீழம் என்கின்ற பிரிவினைதான் இனப்பிரச்சினைக்கு சரியான மார்க்கமான தீர்வாக அமையும்.

இனவாதத்தின்வேர் பிரிவினைதான். அதனால்தான் தேரர் பிரிவினையையே எப்போதும் இயம்புகிறார்.

ஜனநாயக மேடையில் ஓர் இனத்தின் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் வகையில் தேரர் ஆற்றிய உரை பல்லின சமூக அமைப்புக்கொண்ட நாட்டில் ஜனநாயக வரம்பை மீறியதாகும்.

இதன் தாக்கம் நீண்டகாலத் தொடர்ச்சியில் நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச்செல்லும். இதுதான் கால ஓட்ட வரலாறாக அமையும்.

பொது மன்றிலேயே இனவாதமும், ஆக்கிரமிப்புக் கொள்கையும் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டால் அவரின் உள்ளார்ந்த சிந்தாந்தத்தில் மக்களுக்கு அளிக்கும் போதனையில், உச்சாடனத்தில் இனவாதக் கொப்பளிப்பு எப்படிப்பட்டதாக இருக்குமென்பது ஊகிப்பதொன்றும் சிரமமான விடயமல்ல.

மக்களுக்காகத்தான் நாடு, நாட்டுக்காக மக்களல்ல. மக்களின் உரிமைக்காகவும் அவர்களின் வாழ்க்கைக்காகவும், தேசிய அடையாளங்களுக்காகவும் எல்லாவற்றிற்கும் மேலாக நிம்மதியான வாழ்வுக்காகவும் தேசமொன்று இரண்டு நாடானால் ஒன்றும் தவறேயல்ல.

# ஜனாதிபதியின் பொதுக்கட்டமைப்பு அறிவிப்பு வெறும் கண்துடைப்பு; கேலிக் கூத்தான விடயம்

## –வஜிர அபயகுணவர்த்தன எம்.பி

(கொழும்பு)

தனது பதவியை இழக்க நேரிட்டாலும் விடுதலைப் புலிகள் கோரும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தப் போவ தாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருப்பதனை ஒரு காலமும் நம்ப முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் ஒரு நடவடிக்கையாகும். சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 4 மாதங்கள் கடந்த நிலையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் சென றடையவில்லை. இந்த நிலையில் பொதுச் கட்டமைப்புக் குறித்து பேசுவது கேலிக்கூத்தான விடயம். இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே. அதேவேளை, சுனாமியினால் பாதிக்கபபட்ட ஒவ்வொரு குடும்பததிற்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதாக அரசு கூறியிருந்த போதிலும் 2 மாதங்கள் மாத்திரமே இந்த நிதியுதவிகள வழங்கப்பட்டுள்ளன எனவும் வஜிர அபய குணவர்த்தன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ரு-8)

# நோர்வேத் தூதரகத்தின் செயற்பாடுகளை கடுமையாகச் சாடுகிறார் விமல்வீரவன்ஸ

(கொழும்பு)

இலங்கையில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் நடவடிக்கைகள் குறித்து உரிய விசாரணைகள் நடாத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி அரசாங்கத்தினைக் கோரியுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றிய ஜே.வி.பியின் பாராளுமனற உறுப்பினரும், பிரசாரச் செயலாளருமான விமல்வீரவன்ஸவே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.



நோர்வேத் தூதரகம் தனது பணிக்கு அப்பால் சென்று செயற்படுவதாக இவர் குற்றம் சுமத்தினார்.

நோர்வேத் தூதரகத்தினால் அவசர சேவைக்கென பதிவு செய்யப்பட்ட வாகனம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வழங்கப்பட்டமையானது ஏற்றுக்கொள்ளக் கூடிய செயல் அல்ல.

இந்த நிலையில், அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படும் விதமும் இலங்கையின் இறைமையைப் பாதிப்பனவாகவே உள்ளன.

இது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அவமானத்திற்குரிய ஓர் விடயமாகும் எனவும் விமல்வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (ரு-4)

# "வெடிபொருள்" திருத்தச்சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(கொழும்பு)

வெடிபொருட்கள் தொடர்பான திருத்தச்சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

இதனபடி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வெடிபொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், வெடிபொருட்களை சட்டவிரோதமாக வைத்திருப்பவர்களுக்கான அபராதத்தை 25 ஆயிரம் ரூபா வரையில் அதிகரிககவும் இந்தத் திருத்தச்சட்டமூலத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. (ரு-4)

# இனப்பிரச்சினை தொடர்பான கேள்விக்கு பதிலளிக்க அவகாசம் கேட்ட அமைச்சர்

(கொழும்பு)

இனபபிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு அரசியல் விவகார தேசிய ஒருங்கிணைப்புக் குழு அமைச்சர் டி.ஈ.டபிள்யு.குணசேகர பதிலளிக்க மறுப்புத் தெரிவித்தார்.

அந்தக் கேள்விக்கு பதிலளிக்க தனக்கு அவகாசம் வேண்டும என அவர் கேட்டார்.

சமாதான நடவடிக்கைகள் மற்றும் இன விவகாரம் தனது அதிகாரத்தின் கீழ் வருவதல்ல. அது ஜனாதிபதியின் கீழ் வரும் விடயம் என்று குறிப்பிட்ட அமைச்சர், ஜனாதிபதியின சார்பில் இக் கேள்விக்கு பிரதமரே பதிலளிக்க வேண்டும் என் றும அதனால் அந்தக் கேள்வியை பிரதமரிடம் கேட்குமாறும் தெரிவித்தார்.

எனினும் இக்கேள்வி தன்னிடம் கேட்கப்பட்டதனால் அரசாங்கத்தின் சார்பில் அதற்கு விரிவான விளக்கம் அளிக்க தனக்கு சில வாரகால அவகாசம் வேண்டும் என அவர் கேட்டுக்கொண் டார். இனப்பிரச்சினை தொடர்பாகவும் அதற்கு அரசாங்கம் எடுத் துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றததில் எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

ஐககிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள குறிப்பாக ஜே.வி.பி போன்ற கட்சிகளின நிலைப்பாட்டிற்கு மத்தியில் அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்விற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்றும், தடைப்பட்டுப் போயுள்ள சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக எடுக்கப்பட்டிருக்கும நடவடிக்கைகளை தெளிவுபடுத்துமாறும் பாராளுமன்ற உறுப் பினர் தி.மகேஸ்வரன் கேட்டார்.

அமைச்சர் கால அவகாசம் கேட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தி.மகேஸவரன் இரண்டு தசாப்த காலப் பிரச்சினை தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். எனினும் இக் கேள்விக்கு பதிலளிக்கும் நிலையில் தான் இல்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர், தான் இவ்விடயம் குறித்து ஜனாதிபதிக்கு அறிவித்ததாகவும அவரின் பதில் இன்னும் சில வாரங்களில் கிடைத்து விடும் என தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபகஷ எதுவும் கூறாது மௌனம் சாதித்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ரு-4)

# சிவராமின் படுகொலையை கண்டித்து யாழில் சவப்பெட்டி ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் படுகொலையைக் கண்டித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்திற்கு முன்பாக சவப்பெட்டியுடனும், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் ஆகியோருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றிற்கும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

பத்திரிகை சுதந்திர ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ரு)

# பொலிஸாரை வெளியேறுமாறு அஸ்கிரிய பீடாதிபதி உத்தரவு

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகைக்குள் செவ்வாய்க்கிழமை திடீரென உட்பிரவேசித்த சுமார் 200 பொலிஸாரை உடனடியாக மாளிகையை விட்டு வெளியேறுமாறு அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறீ புத்தரகித்த தேரர் உத்தரவிட்டதையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறி மாளிகை வாசலுக்கு வெளியே தரித்து நின்றனர்.

எவ்வித காரணமும் இன்றி மாளிகைக்குள் பிரவேசித்த பொலிஸார் பக்தர்களின் வழிபாட்டிற்கு இடைஞ்சலாக இருந்த காரணத்தினாலேயே அவர்களை வெளியேறுமாறு தான் கூறியதாக தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையின் தியதன நிலமேயான நிரஞ்சன் விஜேரத்னவின் பதவிக்காலம் முடிவடைந்ததால் அவருக்குப் பதிலாக புதிய தியதன நிலமே ஒருவரை தெரிவுசெய் யும் வரை பதில் நிலமே ஒருவரை நியமிப்பதில் சர்ச்சை எழுந்துள்ளது. நிலமே நிரஞ்சன் விஜேரத்னவின் வீட்டிற்கும அவரது அலுவலகத்திற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கபபட்டிருந்தது.

பௌத்த விவகார ஆணையாளரினால் பதில் நிலமே ஒருவர் நியமிக்கப்பட்டாலும் மாளிகையின் விவகாரங்களில் தலையீடு செய்ய அவரை அனுமதிக்கப் போவதில்லை என அஸ்கிரிய மகாநாயக்கர் தெரிவித்துள்ளார். (ரு-4)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

குரு ஜீவாத்மாக்களை மெய்ஞானத்தை நோக்க செலுத்தும் விடயத்தில் ஒரு மானைப் பிடிக்க பயன்படுத்தும் மற்றொரு ஈர்ப்பு மான் போன்று விளங்குகிறார். குருவின் உண்மையான பணி உனக்குள் ஆன்மிக விழிப்பை ஏற்படுத்துவதும் மாயையிலிருந்து விடுதலை பெறுவதற்காக உன்னை உள்முகமாக திருப்பி விடுவதுமாகும்.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கையின் அரசியல் ஆபத்தான நிலையிலாம்

## தேசிய புலனாய்வுப்பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் பாரிய ஆபத்திற்குள் சிக்கியுள்ளதாக தேசிய புலனாய்வுத்துறையின் விசேட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையில் பாரிய விளைவுகள் சிங்கள மக்களுக்கு எதிராக ஏற்படும் சந்தர்ப்பங்கள் உருவாகும் நிலைதோன்றியுள்ளது. தமிழர்களைத் தற்போது உள்ள அரசியல் பொறிக்குள் அகப்பட வைக்கவேண்டிய கட்டாய நிலைக்கு இலங்கை அரசியல்தலைமைகள் தள்ளப்பட்டுள்ளதாகவும் தேசியபுலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

இலங்கையில் மின்சாரசபை ஊழியர்களின போராட்டம் ,புகையிரத ஓட்டுநர்கள் போராட்டம் பல்கலைக் கழக மாணவர் போராட்டம் போன்றவை ஜே.வி.பி யினரால் அரசிற்கு எதிராகமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவற்றிலிருந்து இலங்கை அரசைமீட்டெடுக்க வேண்டுமாயின் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா உடன்டியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தனது அரசைப் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வுப்பிரிவு எச்சரித்துள்ளது.இது மட்டுமல்லாமல் மிகவிரைவில் தொழிற்சங்க மட்டங்களில் மிகப் பெரும் போராட்டங்களை ஜே. வி.பி. யினர் நடாத்தத் திட்டம் தீட்டிவருகின்றனர்.

எனவே ஜே.வி.பி.யினரின் நகர்வுகளை அரசியலில் இருந்து ஓரம் கட்டும் நடவடிக்கையில் சந்திரிகா உடனடியாக இறங்கவேண்டும் என்று புலனாய்வுப்பிரிவு எச்சரித்துள்ளதாகவும் இதன் அடிப்படையிலேயே தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒருவருட பொதுக்கட்டமைப்பு உடன்பாடுக்கு இலங்கை அரசுவர முற்படுகிறது என தேசிய புலனாய்வுப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-4)

## ஈ.பி.டி.பி அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

வீசப்பட்ட கைக்குண்டு பதுங்கு குழிக்கருகாமையில் வீழ்ந்து வெடித்ததினால் பதுங்கு குழிசேதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## உரையாற்றுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவர் கலாநிதி அ.சண்முகதாஸ் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்ப்பாணப பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 'ஊடகமும் விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தலும்' என்னும் பொருளில் உரையாற்றவுள்ளார்.(ற)

## கச்சேரியடியில் நேற்று மாலை மூன்று கடைகள் முற்றாக எரிந்தன

(நல்லூர்)

கண்டிவீதியும், பழையபூங்கா வீதியும் இணையும் சந்தியிலுள்ள மூன்று கடைத்தொகுதிகள் முற்றாகஎரிந்து நாசமாகின. இச்சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.மின்சாரம் தடைப்பட்டதனையடுத்து பெற்றோல்மாக்ஸ் கொளுத்தப்பட்டபோது அருகில் இருந்த பெற்றோல்போத்தல்களில் தீப்பற்றியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களும் இராணுவத்தினரும் இணைந்து தீயை அணைக்க முயற்சித்தலை. உடனடியாக தீ அணைப்பு பிரிவினரின் உதவி நாடப்பட்டது. எனினும் மூன்று கடைகளும் முற்றாக எரிந்து நாசமாகின.

சன்றைஸ் றைக்கிளினேர்ஸ், விஜிதா களஞ்சியம் மற்றும் மிக்சர்கடை ஆகிய மூன்று கடைகளுமே எரிந்துள்ளன. (ச-27)

## தனியார் மயமாக்கலுக்கு மின் ஊழியர் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் அங்கீகரித்துள்ள அமைச்சரவை பத்திரத்தை ரத்துசெய்ய வேண்டும் என இலங்கை மின்சாரசபை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அப்பத்திரத்தை இரத்து செய்யத்தவறும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை விஸ்தரிக்கப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சங்க எதிர்ப்பு காரணமாக கடந்த மார்ச் மாதத்தில் இவ் அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்குவது தடைப்பட்டது,

நேற்று முன்தினம் இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது என்று சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சித் ஜெயலால் தெரிவித்தார், குறிப்பிட்ட அமைச்சரவை அங்கீகாரத்தை ரத்துச்செய்யாவிட்டால் தமது தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துசெல்ல விருக்கின்றோம்.

நேற்று பிற்பகல் 3மணியில் இருந்து அந்தந்த தொழிலுடன் தொடர்புடைய சேவைகளை மட்டுமே செய்வதாகவும் எனவே நாடுமுழுவதிலும் ஏதாவது ஒரு வகையில் மின்சார விநியோகத்தில் தடைகள் ஏற்படலாம் என்றார்.

மின்சாரசபை தொழிற்சங்கங்களுக்கும் இந்தத்துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அறிவிக்கப்படாமல் ரகசியமாக அங்கீகரித்துள்ள அமைச்சரவைப் பத்திரம் மின்சாரசபைக்கோ அதன் ஊழியர்களுக்கு நன்மை பயக்கக் கூடியது அல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச.8)

## கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் கைதாகி விசாரணையின் பின் விடுதலை

(கொழும்பு)

கொழும்பு ஆனந்தாக்கல்லூரி அதிபர் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு 5மணிநேரம் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

தற்காலிக பணி நீக்கத்திற்கு உட்பட்டிருக்கும் ஆனந்தாக்கல்லூரி அதிபர் பி.எ.அபயரத்தினவை கைதுசெய்த குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர் நீதிவான் முன்னிலையில் அவரை ஆஜர் செய்தனர்.

குற்றப்புலனாய்வு பிரிவுத்தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் மாலை வருமாறு கல்லூரி அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததற்கு அமைய அவர் அங்குசென்றுள்ளார் அதன்போதே அவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் நீதிமன்றில் வைத்து அவர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார். குற்றப்புலனாய்வுப்பிரிவுக்குப்பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக இயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிரமெண்டிஸ் ஆகியோரின் பணிப்பிற்கமைய பொலிஸ் அதிகாரி பீ.அம்பாவில விசாரணைகளைமேற்கொண்டு வருகிறார்.

முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகவும் அதனால் ஆனந்தாக்கல்லூரி அதிபர் பணிநீக்கம் செய்யப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி விசாரணைப்பிரிவு செய்த பரிந்துரைக்கமைய கல்வி அமைச்சின் செயலாளரினால் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச)

## ஜனாதிபதி...

சந்திப்பு இன்று இடம்பெறுகிறது,

இச்சந்திப்பின் முடிபு நிச்சயமாக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பி யினருக்கு முழுமையான விளக்கம் அளிப்பதற்காக இன்றைய தினம் அக்கட்சியின் உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 16ம் 17ம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திட ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

இதனை அண்மையில் ஜனாதிபதி கொழும்பில் ஆற்றிய உரை வீரிவாக விளக்கியுள்ளது. ஆனால் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஜே.வி.பியினரை அழைத்து பொதுக்கட்டமைப்பு குறித்து அவர்களுக்கு விளக்கம் அளித்து அதற்கு அவர்களின் பூரண அனுமதியை பெறும் நோக்கிலேயே ஜனாதிபதி அவர்களை சந்திக்க உத்தேசித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பை நிறுவதில் இருக்கும் சிக்கல்கள் குறித்து நேற்று முன்தினம் முஸ்லிம் பிரமுகர்களையும் சந்தித்து ஜனாதிபதி கலந்துரையாடலை மேற்கொண்டார்.

முஸ்லிம் சமாதான பேரவையின் தலைவர் யாவிட் யூசுப், அமைச்சர் பேரியல் அஸ்ரப், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்து பொதுக்கட்டமைப்பு குறித்து ஜனாதிபதி பேசியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-4)

## தமிழீழ...

புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தார்.

தான்ஆரம்பித்த இயக்கத்திற்கு அவர் முதலில் புதிய தமிழ் புலிகள் எனப்பெயரிட்டார். 1976 ஆம் ஆண்டு மே 5 ஆம் நாள் புதிய தமிழ் புலிகள் என்ற பெயர் தமிழீழ தேசியத்தலைவரால் மாற்றப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் எனப்பெயரிடப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை மிக்க பலம்பொருந்திய இயக்கமாகக் கட்டிவளர்த்த தலைவர் பிரபாகரன் இலங்கை அரசாங்கத்துக்கு சவால்விடும் வகையில்பல தாக்குதல்களை நெறிப்படுத்தினார். இதேவேளை 16 வயதில் தமிழ்மக்களுக்காகப் போராட வேண்டுமெனக் கிளர்தெழுந்த தலைவர் ஆரம்பத்தில் பல சவால்களை எதிர்கொண்டு தமிழீழவிடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-04)

## நாடுதழுவிய...

எனவே அரசாங்கம் இதனைக் கருத்திற் கொண்டு பொதுக்கட்டமைப்பினை விடுதலைப்புலிகளிடம் வழங்கக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிகளினதும் பூரண ஆதரவுடன் இக்கண்டனப் பேரணியை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(ச-4)

## விவசாய வங்கி இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

புலோலி கமநலசேவைகள் நிலையத்தின் விவசாயிகள் வங்கிஇன்று திறந்து வைக்கப்படவுள்ளது. புலோலி பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் பிரதமவிருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.(ச)

## நோர்வேத்....

தாகவும் அபத்தம் தெரிவித்தார். இதனாலேயே நோர்வே அரசின் தெளிவான செயற்பாடு குறித்து விமல் வீரவன்சவுக்குத் தெரியப் படுத்தும் வகையில், நோர்வேத் தூதரக ஆவணங்கள் தொடர்பில்ஓர் தெளிவுநிலையை ஏற்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. (இ-4)

## மட்டக்களப்பு...

யலில்வைக்கப்பட்டுள்ளார்கள்.

தங்களின்விடுதலை தொடர்பாக மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கேட்டுள்ளனர்.விளக்கமறியல் கைதிகளான கி.ரமேஷ்குமார், மு.உதயகுமார், ஜெ.சரசகாந்தன், க.கீதன் மற்றும் க.சுதர்சன் ஆகியோர் உண்ணா விரததில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேந்திரன், தங்கேஸ்வரி கதிர்காமன் ஆகியோர் தங்களை நேரில்வந்து சந்திக்கவேண்டுமென சிறைச்சாலை நிர்வாகத்திடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.இவர்களின் இக்கோரிக்கை தொடர்பாக தற்போது கொழும்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறைச்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இன்று பாராளுமன்றத்தில் பத்திரிகையாளர் சிவராம் படுகொலை தொடர்பான விவாதத்தில் தாங்கள் கலந்துகொள்ளவேண்டியிருப்பதால் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கைதிகளுக்கு தகவல் அனுப்பியுள்ள போதிலும் உண்ணாவிரதத்தை கைவிடவில்லையென தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சிறைச்சாலையிலுள்ள ஏனைய விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவரும், ஆதரவாளர்கள் இருவரும் ஆதரவுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-4)








மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம் : 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதியநேரம்)
(வார இறுதி நாட்களும், விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

(C-1354)





இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.